தென்மொழி

முனைப்புற்ற தொண்டர்களே முனைதல் வேண்டும்!

நல்லதொரு மாட்டுக்கொரு சூடே என்பார்—இந்
நாயினத்துத் தமிழர்பல சூடு பெற்றும்,
வல்லெருமைத் தோலர்களாய் இருப்ப தாலே—ஒரு
வளர்ச்சியதும் காணுமல் வீழ்வே கண்டார்!
வெல்லுதற்கும் தோற்பதற்கும் பேச்சே யில்லை!—நல்ல
வீறுவர வேண்டாமோ? துளியும் காணேம்!
கொல்லுதற்கே ஆட்பட்டார்; அடிமைப் பட்டார்!—தமிழ்க்
கொடிபறக்க வேண்டுமெனில் விழிப்பு வேண்டும்!

விழிப்புற்ருர் எல்லாரும் தலைவர் ஆனுர்!—மக்கள்
விழிப்படைய உதவாமல் அவரை ஏய்த்தே
செழிப்புற்ற வாழ்க்கையினைத் தேடிக் கொண்டார்!—தம்
சிந்தனையை முயற்சியினைத் தமக்கே செய்தார்!
வழிப்பற்றும் தொண்டர்களோ பிளவு பட்டார்!—நல்ல
வாய்ப்புகளைத் தேடுவதே பொதுத்தொண் டென்ருர்!
மொழிப் பற்றும் இனப்பற்றும் நாட்டுப் பற்றும்—கொண்ட
முனைப்புற்ற தொண்டர்களே முனைதல் வேண்டும்!



ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி: 23
ஓலை: 9

விலை
உருபா: 1-75

நமக்கு வந்த மடல்கள்.

O : *1239* : அன்புள்ள ஐயா, அவர்களுக்கு, வணக்கம். தென்மொழி, தமிழ்ச் சிட்டுக்கு ஆண்டுக் கட்டணம் கட்டித்தொடர்ந்து படித்து வருபவர்களில் நானும் ஒருவன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிற்க, சில திங்கள்களாகவே மேற்கண்ட இரண்டு இதழ்களும் சரியான செய்திகளைத் தாங்கி வரவில்லை. சோவியத்து நாட்டைப் பற்றியும், உருசியாவைப் பற்றியும், 'சமரசம்' 'புதிய கலாச்சாரம்' முதலிய ஏடுகளில் வந்த செய்திகளை எடுத்துப் போட்டும், பக்கங்களை நிரப்பி அனுப்பி விடுகின்றீர்கள். அந் நாடுகளைப் பற்றித் தெரிவிக்க வேண்டாம் என்பது அன்று என்னுடைய நோக்கம். நம்நாட்டுச் சிறுவர்களையும் இளைஞர்களையும் எந்த வகையில் ஆட்சியாளர்களும், கல்வி நிலையங்களும், ஏடு நடத்துவோர்களும், திரைப்படத் துறையோரும், இப்படிப் பல வழியில் அவர்கள் உள்ளத்தில் இன, மொழி, தமிழ் நாடு எண்ணமே இல்லாத வகையில் திசை திருப்பி விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். கல்வி நிலையங்களில் நடக்கும் பாடங்கள், பாடப் பொத்தகங்கள் வழியாகத் தேசியம், தேசியம் என்னும் தேசீய ஒருமைப் பாட்டையே பிள்ளைகளுக்குச் சொல்லித் தருகிறார்கள். பாடங்களோ, வட நாட்டுத் தலைவர்களைப் பற்றியும் வடநாட்டைப் பற்றியுமே இருக்கின்றன. இது தங்களுக்கும் தெரிந்ததுதான். நிலைமை இப்படி இருக்க நீங்கள் நடத்தும் ஏடுகளில் வரும் செய்திகள் சரியில்லை. அதில் வரும் பாட்டுகள்தாம் உணர்வு ஊட்டக்கூடிய வகையில் இருக்கின்றனவே தவிர, மற்றப்படி ஏதும் முப்படி நிலைக்குப் படிப்பவர்களைக் கவரக் கூடிய நிலையில் இல்லை.

எனவே, இனிமேலாகிலும் படிப்போருக்கு, மொழி, இன, நாட்டுப் பற்று வரக் கூடிய அளவிற்குக் கட்டுரைகளும், நாடகங்களும், கதைகளும், பாக்களும் இடம் பெற வேண்டும். இடம் பெறும் என்ற நம்பிக்கையுடன் முடிக்கிறேன். கலப்புச் சொல் ஒன்றிரண்டு வருகிறது. கவனம் செலுத்தவும்.

குறிப்பு : கல்விக் கூடங்களிலும், ஏடுகளிலும், பேச்சு, படிப்பு மூலமாகவும் கலப்பு மொழியிலேயே பேசிப் படிக்கப் பட்டு வந்த இந் நாட்டு மக்களுக்குத் தென்மொழி, தமிழ்ச்சிட்டுத்தாம் தனித் தமிழ் வழியைக் காட்டி வருகின்றன. எனவே, இவ்விதழில் கையாளும் ஒவ்வொரு சொல்லையும் நன்றாக ஆய்ந்து பார்த்துத் தூய தமிழ்ச் சொல்லையே வெளியிடக் கேட்டுக் கொள்கிறேன்.

— மா. அறவாழி, பின்னையூர்.

O : *1240* : பெரு மதிப்பிற்குரிய ஐயா! தாங்கள் ஒருவரே தமியராய்த் தமிழ்க் காப்புக்காக, உழைப்பு, பொருள் என்று இவற்றை ஈகமாக்கி உச்ச நெறிமன்றில் தொடுத்த வழக்கு உண்மை, தூய்மை, நேர்மை இருப்பதால் வெல்வதாக என்று உளமார நினைக்கிறேன். தங்கள் அன்புள்ள,

—புலவர். ச. சிவசங்கு, சிறுத்தொண்ட நல்லூர்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

ஊக்கம் இழக்க வேண்டாம்!

ஊக்க மிழக்க வேண்டாம்!—உள்ள
உறுதி குலைய வேண்டாம்!
ஆக்கம் வந்து சேரும்;—நம்
அனைத்துத் துயரும் தீரும்!

உண்மை உணர்ந்த தொண்டர்—உடன்
உழைக்க வருதல் வேண்டும்!
திண்மை யுள்ள பேர்கள்—ஒன்று
திரண்டு கூடல் வேண்டும்!

பத்துப் பேர்கள் ஊர்க்கு—ஒரு
பண்ணை உழவு போல
ஒத்து ழைக்க வந்தால்—விரைந்(து)
ஊரைத் திரட்ட முடியும்!

சந்தை கூடும் நாளில்—நாற்
சாலை கூடும் இடத்தில்
மந்தை மந்தை யாக—ஊர்
மக்கள் திரளும் போதில்,

கருத்தை விளக்கிப் பேசி—நல்ல
காட்சி அமைத்து நடித்துத்
திருத்தும் முயற்சி செய்தால்—மக்கள்
தீமை உணர்ந்து கொள்வார்!

உழைப்பு மிகவும் வேண்டும்!—நம்மை
ஊர் மதிக்க வேண்டும்!
பிழைப்ப தற்குத் தொண்டை—ஒரு
பேறென் றெண்ண லாமோ?

மக்கட் கிழிவு செய்தார்—இம்
மண்ணை ஆள வந்தார்!
ஒக்க அவரை வீழ்த்தி—நலம்
ஊருக் காக்க வந்தோம்!

பாட்டும் உரையும் கூறிப்—பெறும்
பயனை எடுத்துக் காட்டி,
நாட்டும் தொண்டில் மக்கள்—பொது
நலத்தை உணர வைப்போம்!

சாதி இழிவு சொல்லி—மதச்
சழக்கை விளக்கிப் பேசி,
ஓதி உணர்த்த வேண்டும்!—மக்கட்
குண்மை கூற வேண்டும்!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு.
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசுஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், தென்மொழி கதிர் மதியன்,தென்மொழி இரா. பாலகங்காதரன் பாவலர். சா. சி. குப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன். பாச்சுடர். புலவர். இரா. வடிவேலனார். க. மு, கல், இ. மருத்துவர். சி. இராமச்சந்திரனார். (தொலைபேசி : 847829

சுவடி 23] உ0௲அ மடங்கல்-கன்னி (ஆக-செப்.'87) [ஓலை 9

இந்தியாவில் எடுத்த எடுப்பில் பொருளியல் புரட்சியை உருவாக்க முடியுமா?-4

நம் இயக்கத்திலும், பிற இயக்கங்களிலும் பொருளியல் புரட்சியை வரவேற்பவர்கள் நிறையவே இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் இளைஞர்களே; மக்களினத்தை மேலோட்டமாகப் பார்ப்பவர்

களுக்கு, முதலில் தெரியும்—அஃதாவது வெளிப்படையாகத் தெரியும் வேறுபாடு பொருளியல் ஏற்றத்தாழ்வே! மக்களில் ஒரு சாரார் ஏழ்மையுற்றிருப்பதும், ஒரு சாரார்- இன்னும் சொன்னால் மிகச் சிறுபான்மையரே - பொருள் வளம் பெற்று அனைத்து நலன்களுடன் வாழ்வதும் எளிதில் விளங்கிக் கொள்ளும் வேறுபாடுகளே! எனவே, தொடக்கநிலையில், இளைஞர்கள் அரசியல் வேறுபாடுகளையும் அதன்கண் அகமும் புறமுமாய் விளங்கும் சூழ்ச்சிகளையும் விளக்கிக் கொள்வதை விட, பொருளியல் வேறுபாடுகளையே பளிச்செனவிளங்கிக் கொள்கின்றனர். மேலும் தங்களுக்கென எந்த வருவாயுமற்றுப்பொருள் தேவைகளை எளிதில் உணரும் பருவத்தினராகவுள்ள இளைஞர்களுக்குப் பொருள்நிலை ஏற்றத் தாழ்வுகள் விளங்காத புதிராக இருப்பதில்லை. பொருளியல் ஏற்றத் தாழ்வுகள் விளங்கவே, அவற்றுக்குக் காரணமாகவுள்ள அதிகார ஏற்றத் தாழ்வும், அதற்கு அடிப்படையாகவுள்ள அரசியல் நிலைகளும் அவர்களுக்குப் படிப்படியாக விளங்கும் கூறுகளாகிப் போகின்றன.

எனவே, அரசியல் அதிகார வேறுபாடுகளை விட மிகுதியான இளைஞர்களைப் பொருளியல் வேறுபாடுகளே மிகுதியும் கவர்வதால், அவ் வேறுபாடுகளை முன்னெடுத்துப் பேசுகின்ற கொள்கைகளால்—கட்சிகளால்—முதலில் கவரப்பட்டு, அவற்றை உள்ளடக்கிய போராட்டங்களில் ஈடுபாடுகள் கொள்கின்றனர். பெரும்பாலார் இளமைப் பருவத்தில் பொதுவுடைமைக் கொள்கைகளால், ஈர்க்கப் படுவதற்கும், கொஞ்சம் முதிர்ந்த பின் முற்றிலும் அரசியல் கொள்கைகளைப் பற்றிக் கொண்டு வளர்வதற்கும் இக் குமுகாய மனவியலே காரணமாகிறது.

இனி, இவற்றையும் விட குமுகாய—மதத் தாழ்ச்சி நிலைகள்—ஏற்றத் தாழ்வுகள்—மிகுந்துள்ள மக்களினத்தில்—பொருளியல் வேறுபாடுகளையும் முந்திக் கொண்டு, சாதி, மதக் கட்டுப் பாடுகளும் அவற்றின் ஆரவாரமான, பொருள் விளங்காப் போலித்தனங்களும்—இளைஞர்களை எளிதில் கவர்ந்து விடுவதாகக் கூடக் கூறலாம். மதச் செயல்களின் மருட்டல்கள், மயக்கங்கள், வியப்புகள், அறிவுக்குப் பிடிபடாத கரணிய கருமியங்கள், அவற்றின் விழா வேடிக்கைகள், ஆரவாரத் தனங்கள், கவர்ச்சித் தனங்கள், மத நடவடிக்கைகள் என்னும் பெயரால் ஆண்களும் பெண்களும் கலந்து பழகுகின்ற வசதி வாய்ப்புக் கிளுகிளுப்பு மனநிலைகள்—ஆகியவை இளைஞர்களுக்குக் மிகவும் எழுச்சியூட்டுகின்றன. எனவே முற்றி முதிராப் பருவத்தில் பகுத்தறிவு இயக்கங்களிலும் அவர்கள் விரைந்து பங்கு கொள்கின்றனர். போராட்டங்களிலும் கலந்து கொள்கின்றனர். அகவை முதிர முதிர, அறிவு விளங்க விளங்கவே, அவற்றிலுள்ள போலித் தனங்களும், அவற்றைத் தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்கின்றவர்களின் பொய்புனைவுகளும் பொருள் சுருட்டல்களும் அவர்களுக்குப் வெளிப்படையாகவே விளங்கத் தொடங்குகின்றன. அக்கால் அவற்றில்

மனநிறைவு அற்றவர்களாக, இன்னும் உண்மையான அழுத்த மான கொள்கைகளை ஆராய்ந்து அவற்றை நாடிச்செல்கின்றனர்.

இஃதொருபுறம் இருக்க மறுபுறத்தில் படிக்காத, படித்த இளை ஞர்களில் கல்வுளி மங்கன்களாக இருக்கின்ற பலர்—தொடக்கத் தில் மத ஈடுபாடுகளில் பெரும்பாலும் பங்கு கொள்வதற்கும் இதுவே கரணியம்.

இவ்வாறு, மத நிலைகள், சாதி நிலைகள், பொருள் நிலைகள், அரசியல் நிலைகள்—ஆகிய இவற்றில் படிப்படியாக ஊன்றி, ஊன்றி, விடுபட்டு, அல்லது ஊன்றாமலேயே ஏதோ ஒரு நல்ல வழிநடத்துதலின் கரணியாக நேராக, மொழி, இன, நாட்டு வர லாற்று நிலைகள், முற்போக்கு மாற்ற நிலைகள் முதலியவற்றில் உணர்வும் அறிவும் பற்றித் தம் இன நல மேம்பாட்டுக்காக ஈடு பாடு கொள்ளும் இளைஞர்களோ மிக மிகச் சிலராகவே இருப்பர்.

இவர்களுள், சுற்றி வளைத்துக் கொண்டு வருபவர்களில் பலர் கொஞ்சம் பட்டறிவு உள்ளவர்களாகவும் இருந்து விடுவதுண்டு. நேரடியாக மொழி, இன, நாட்டு நல முயற்சிகளுக்கென வந்து விடுபவர்களில் பலர் பட்டறிவு குறைந்தவர்களாகவும் இருந்து விடுவதுண்டு.

அண்மையில் நடந்த நம் சுற்றுச் செலவு நிகழ்ச்சிகளில், சிலர் மேடையேற ஆர்வமுடையவர்களாக இருப்பதைக் கண்டு, அவர் களின் அழுந்திய உணர்வுகளை மதித்து, அவர்களையும் சில நிகழ்ச்சி களில் பேச அழைக்கச் சொன்னோம். ஆனால் அவர்கள் தனிப்பட்ட கலந்துரையாடல்களில், மட்டும் பேசும் திறம் பெற்றவர்களாக இருந்தனரே யன்றி மேடைப் பேச்சுகளில் திறம் குன்றியவர் களாக இருப்பதைக் கண்டு மிகவும் வருந்தினோம்.

பொதுவாகவே, மொழி, இன, நாட்டு நலத் தொண்டர் களுக்கு மொழியியல் அறிவும், இன, நாட்டு வரலாற்று அறிவு நிலைகளும் மிக்கோங்கி யிருத்தல் வேண்டும். இனி, இவர்களைப் பார்க்கினும் பொருளியல் சீர்திருத்தங்களைப் பற்றி ஈடுபாடு கொள்பவர்களுக்கு மிகுந்த எழுத்துத் திறனும் பேச்சு வன்மையும் மிகவும் கூடுதலாக இருத்தல் வேண்டும். எழுத்தும் பேச்சுந்தாம் ஒரு குமுகாயத்தை மீட்டெடுக்க வல்ல முதல் கருவிகளாகும். இளைஞர்கள் பலர் இவ்விரு திறன்களிலும் போதுமான ஈடுபாடு காட்டுவதே இல்லை.

மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்கும், அவர்களை ஒருங்கிணைப்பதற்கும் இவ்விரு திறன்களும் மிக மிக இன்றியமை யாதவை என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதே இல்லை. ஓர் இயக்கம் வளர்ச்சி பெறுவதற்கு இவ் விரு திறன்களும் அடிப்படை யானவை. இவை இல்லாமல் கொள்கைகளைப் பரப்ப முடியாது. செயல்கள், நம்பால் மக்களுக்குள்ள நம்பிக்கையை அதிகப்படுத்து தற்கு உதவும் என்றால், எழுத்தும் பேச்சும் அவர்களுக்கு நம் பால் உள்ள ஈடுபாட்டை மிகுதிப் படுத்துதற்கு உதவும். நம் பால் ஈடு

பாடு கொள்ளக் கொள்ளத்தான் பொதுமக்கள் நம் கருத்துகளைக் கேட்க விரும்புவார்கள். நம் கருத்துகளைக் கேட்கக் கேட்கத்தான் அவர்கள் உணர்வும் அறிவும் பெற முடியும். உணர்வும் அறிவும் பெறப் பெறத்தான் அவர்கள் போராட்டத்திற்கும், பின் புரட்சிக்குமான எழுச்சி பெற முடியும். எனவே எழுத்தும் பேச்சும் எவ்வளவு இன்றியமையாதவை என்பதை இளைஞர்கள் முற்றுக உணர்தல் வேண்டும். பொருளியல் புரட்சிக்கோ இவை மிக மிகக் கூடுதலாகத் தேவை. ஆனால், பொருளியல் புரட்சிக்குத் தங்களை முன் வைத்துக் கொண்ட இளைஞர்கள், இதை முழுவதும் உணர்ந்து கொண்டதாகவே தெரியவில்லை.

இளைஞர்கள் ஓரிரு கட்டுரைகளையோ மேடைப் பேச்சுக்களையோ எழுதவும் பேசவும் செய்தவுடனேயே, மக்களெல்லாம் எழுச்சி கொண்டு விடுவர் என்று தப்புக் கணக்குப் போட்டு விடுகின்றனர். இஃது எவ்வளவு பெரிய அறியாமை! இந்நாட்டில் பொருளியல் புரட்சிகளைப் பற்றிப் பல்லாற்றானும் விளக்கி, இதுவரை, கடந்த ஐம்பது ஆண்டுகளாகப், பல்லாயிரக் கணக்கான கட்டுரைகளையும் பேச்சுகளையும் எழுதியும் பேசியும் வந்தும், ஒரு போராட்டமோ புரட்சியோ என்றும் எப்பொழுதும் நிகழ்ந்ததில்லை. அவ்வப் பொழுது ஏதோ அரசினரை அச்சுறுத்த சில எழுச்சிகள், சில போராட்டப் பெயர்ப் படுத்தங்கள், ஊர்வலங்கள், சிறு சிறு ஊதியங்களை நோக்கமாகக் கொண்ட அல்லது தலைவர் தங்களை நிறைவு படுத்திக் கொள்ளும் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றனவாகக் கூறலாமே தவிர, இருக்கின்ற நிலைகளை—அவற்றின் அடிப்படைகளைத் தகர்த்தெரியுமாறு—உருசியாவில் நடந்த அக்டோபர் புரட்சிபோல—பிரெஞ்சில் நடந்த அரசியல் புரட்சி போல—சீனாவில் நடந்த மக்களியல் புரட்சி போல—வியட்நாமில் நடந்த விடுதலைப் போராட்டம் போல—ஒரு கால எல்லையிலோ, தொடர்ந்தோ ஓர் எழுச்சியை உருவாக்கிக் காட்டவில்லையே—ஏன் ?

ஏனெனில், மக்கள் அந்த நிலைக்கு உணர்வூட்டப் பெறவில்லை; அறிவூட்டப் பெறவில்லை ; எழுச்சியூட்டப் பெற வில்லை. அவ்வியத்தகு செயலைச் செய்வதற்கு ஏற்ற வகையில் வல்லமை மிக்க எழுத்துகளோ, பேச்சுகளோ இங்கு நிகழவில்லை. வெறும் பேச்சு ; வெற்றுப் பேச்சு ! இல்லெனில் வெறும் எழுத்து ! வீணான எழுத்து ! இவை மக்களைப் போய்த் தொடவில்லை. எனவேதான், இம் முயற்சியில் உள்ள இளைஞர்கள் தாங்கள் எழுச்சி பெற்றதைப் போலவே மக்களையும் எழுச்சி பெறச் செய்யும் முயற்சிகளைத் தங்கள் எழுத்தாலும் பேச்சாலும் முதலில் செய்தாகல் வேண்டும்.

உழாமல் எப்படி விதைப்பது? நீரும் எருவும் இல்லாமல் எப்படி விளைவது? எழுத்தும் பேச்சும், உழவும் உழவுக்குப் பின் நீரும் எருவும் போல் பயன்படுதல் வேண்டும். 50 இளைஞர்கள் இருக்கும் ஒரு போராட்ட முயற்சிக் குழுவில் இக்கால் ஐம்பது பேருமே எழுதவும் பேசவும் வல்லவர்களாக இருத்தல் வேண்டும். இந்த

ஐம்பது பேரும் பத்துக் குழுக்களாகப் பிரிந்து, ஒரு நாளைக்கு 10 கம்மங்களுக்கு (சிற்றூர்களுக்கு)ப் போய், ஓர் ஊருக்கு 100 பேர் மேனி 1, 000 பேரைச் சந்திக்க வேண்டும். ஐந்து பேர்கள் உள்ள குழுவில் ஐந்து பேரும் ஐந்து கோணங்களில்—ஒருவர் அரசியல் ஒருவர் பொருளியல், ஒருவர் குமுகவியல், ஒருவர் நாட்டியல், ஒருவர் வரலாற்றியல்—என்று பிரித்துக் கொண்டு அவ்வூர் மக்களுக்கு விளங்கும் படியாக, எளிமையாகவும் இனிமையாகவும், உண்மையாகவும் உணர்வாகவும் பேசி அம் மக்களுக்கு உணர்வையும் அறிவையும் ஊட்டுதல் வேண்டும். இவ்வாறு நாள்தோறும்—தொடர்ந்து-சோர்வுறுமல்—எதிர்ப்புகளுக்கஞ்சாமல் — ஒற்றுமையாகத்—தங்களுக்குள் எவ்வகைக் கருத்து வேறுபாட்டையும் வரவழைத்துக் கொள்ளாமல்—முயற்சி செய்தல் வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு மாநிலத்திலும் நடைபெறுதல் வேண்டும். இப்படிச் செய்யும் ஒவ்வொரு மாநிலக் குழுவும் அவ்வப் பொழுது கலந்து பேசிக் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டு இயங்குதல் வேண்டும். நாளுக்கு நாள் இக்குழுக்கள் 5, 10, 100—என்று எண்ணிக்கையிலும் செயலிலும் பெருகுதல் வேண்டும்.

இவ்வாறு செய்வதற்கு இங்குள்ள இளைஞர்கள் திறம் உள்ளவர்களாக இருப்பார்களா ? திறமிருந்தாலும் முன் வருவார்களா? நிலைத்து நிற்பார்களா ? நிலைத்து நிற்பவர்கள் பிணக்குகள் இல்லாமல் இருப்பார்களா ? பிணக்குகள் வந்தாலும் தங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொண்டு, பிளவு படாமல் இருப்பார்களா ? பிளவு பட்டாலும் ஒருவரை யொருவர் எதிர்த்துக் கொள்ளாமல் இருப்பார்களா ? எதிர்த்துக் கொண்டாலும் ஒருவரை யொருவர் அழித்துக் கொள்ளாமல் இருப்பார்களா ? எண்ணிப் பார்த்தல் வேண்டும், இளைஞர்கள் ! இத்தகைய திறமைகளும் உறுதிப்பாடும் உள்ளத் தெளிவும் உள்ள இளைஞர்களே, அத்தகைய புடட்சிகளை உருவாக்குவதற்குத் தகுதியுள்ளவர்கள்.

ஆனல், ஐயகோ, இற்றை இளைஞர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறர்கள் ? அவர்களிடம் மேற்கூறிய உணர்வுகளுண்டா ? திறனுண்டா ? அறிவுண்டா ? ஈடுபாடுண்டா ? மக்கள் மேல் அன்புண்டா ? அந்த அன்பின் அடிப்படையில் மக்களை அணுகும் ஆற்றலுண்டா ? அணுகிஞலும், அவர்களுக்கு எடுத்துக் கூறும் துணிவுண்டா ? நேர்மையுண்டா ? உண்மையுண்டா ? —இவை யெல்லாம் ஒருங்கிணைந்து செயல் பட்டாலன்றே இங்குள்ள மக்களுக்கு விடிவுண்டாகும்.

இன்றுள்ள இளைஞர்களில் உணர்விருப்பவர்களுக்குத் துணிவு இருப்பதில்லை; துணிவிருப்பவர்களுக்கு அறிவிருப்பதில்லை; அறிவிருந்தால் ஒருங்கிணைவதில்லை; ஒருங்கிணைந்தால் முயற்சியிருப்பதில்லை; முயற்சியிருந்தால் அது நிலைத்திருப்பதில்லை. இப்படிப் பல்வேறு கோணங்களில் பலவகையான குறைபாடுடையவர்களாக இளைஞர்கள் சிதறிக் கிடக்கும் நிலையில் எங்கே புரட்சி செய்வது ? எப்படிச் செய்வது ?

மணிகளை நிறுக்கும் எடையளவு !

மணிகளை நிறுக்க ஒவ்வொரு நாட்டிலும் ஒருவகை எடையளவு முறை இருந்தது

தமிழ் நாட்டில் குன்றிமணி(க்கொடியின்) விதைகள் மணிகளை நிறுக்கப் பயன்பட்டன. ஒரு குன்றிமணியின் எடை 100 மில்லி கிராம். (10 குன்றி மணி சேர்ந்தது, ஒரு கிராம்.)

ஆனால், இப்பொழுது உலகம் முழுக்கக் 'காரட்' என்னும் எடைதான் மணிகளை நிறுக்கப் பயன்படுகிறது. 'காரட்' என்றால் விதை என்று பொருள். ஆப்பிரிக்கர்கள் மணிகளை நிறுக்க'காரட்' என்னும் ஒருவகை விதையைப் பயன்படுத்தினர். இதுவே'காரட்' என்றாயிற்று என்பர். அரேபியர்கள் முத்துகளை நிறுக்க 'காரட்' (4 தவச எடை) என்னும் அளவைப் பயன்படுத்தினர். இதுவே 'காரட்' என்று ஆயிற்று என்றும் சொல்வார்கள்.

மணிகளைக் 'காரட்டு' என்னும் எடையில்தான் நிறுக்க வேண்டும் என்று முதன் முதல் சட்டம் செய்த நாடு இங்கிலாந்து. 1913-இல் இந்தச் சட்டம் வந்தது. அது முதல் இம்முறை உலகம் முழுக்கப் பரவியது.

ஒரு காரட் என்பது 200 மில்லி கிராம். (3. 17 குன்றிமணி சேர்ந்தது, ஒரு காரட்டு.) 5 காரட் கொண்டது, ஒரு கிராம். ஒரு கிலோவுக்கு 5, 000 காரட்டு.

காரட்டைப் மத்து பாகமாகப் பிரித்துக் கொள்ளுவார்கள். 1/10 காரட்டு என்றோ, 1 காரட்டு என்றோ கூறுவார்கள்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

புரட்சி என்பது கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவுவது அன்று ! துமுக்கியைக் கொண்டு போர் செய்வதும் அன்று. இளைஞர்கள் சிலர் புரட்சி என்பது கருவிப்போராட்டம் அல்லது போர் என்றே கருதிக் கொண்டிருக்கின்றனர். எடுத்த எடுப்பிலேயே புரட்சி என்பது கருவிப் போர் என்றோ, ஆட்சி மாற்றம் என்றோ பொருளாகி விடாது. புரட்சி என்பதற்கு உண்மையான பொருள், மக்களின் மன மாற்றம் என்பதே ! மக்களை இப்பொழுதுள்ள மன நிலையிலிருந்து மாற்ற முறச் செய்து, அனைவர்க்கும் பொதுவான நலந்தரத் தக்க ஓர் ஆட்சியை அரசை அமைக்கும் மனநிலையை உருவாக்குவதே ஆகும். மக்களை மனந்திரும்பச் செய்யாமல் ஆட்சியை மாற்றியமைப்பதால் எந்த ஒரு பயனையும் நிலையாக உருவாக்கிட முடியாது. மக்களை மனமாற்றம் அடையச் செய்யும் முயற்சிக்கு இப்பொழுதுள்ள ஆட்சியாளர்களோ அல்லது அவர்களுக்கு உறுதுணையாக உள்ளவர்களோ தடையாக இருப்பார்களானால், அப்பொழுதே ஆட்சியை எதிர்த்துப்போராட வேண்டியிருக்கும். எனவே, புரட்சி என்னும் சொல்லுக்கு இரண்டாவது பொருளே ஆட்சியை மாற்றி அமைப்பது என்பதாகும். இதனை இன்றைய இளைஞர்கள் தெளிவாக உணர்ந்து கொள்வது நல்லது.

(தொடரும்)

வயிரம் நிறுக்கும் பொழுது மட்டும் 1 காரட்டை நூறு பகுதி யாகப் பிரித்துக் கொள்ளுவார்கள். ஒவ்வொரு பகுதியும் ஒரு புள்ளி எனப்படும். (நூறு புள்ளி கொண்டது ஒரு காரட்டு.)

முத்துகள் எடை தவச எடை (கிரையின்) என்பார்கள். இது வும் அரேபியர்களிடம் இருந்து வந்த வழக்கம். 4 தவச எடை கொண்டது, ஒரு காரட்டு.

மணிகளுக்கு விலை சொல்லும் பொழுது ஒரு காரட்டு என்ன விலை என்றுதான் சொல்லுவார்கள். (அரிசி ஒரு கிலோ இன்ன விலை என்று சொல்லுவது போல.) ஒரு மணியின் எடையைப் பொறுத்துத்தான் அதன் விலை. மணி சின்னதாக இருக்க இருக்க விலை குறைவு ; பெரிதாக இருந்தால் விலை அதிகம். எடுத்துக்காட் டக 1/10 காரட்டு எடையுள்ள வயிரத்தின் விலை, ஒரு காரட்டு 6 ஆயிரம் என்றால், 1/100 காரட்டு எடையுள்ள மிகச் சிறிய வயி ரங்களின் எடை காரட்டு 2 ஆயிரம் உருபாதான் இருக்கும்.

தங்கத்தையும் 'காரட்டு' கணக்கில் சொல்லுவது உண்டு. ஆனால், இ'து எடையைக் குறிக்காது ; மாற்றைக் குறிக்கும். தூய் மையான தங்கம் 24 காரட்டு. இதைப் 'பசும்பொன்' என்று சொல்லுவார்கள். வடமொழியில் 'அபரஞ்சி' என்பார்கள். நகை செய்வது 22 காரட்டு. 22 பங்கு தங்கம் 2 பங்கு செம்பு.) 14 காரட்டு என்றால் 14 பங்கு தங்கமும் 10 பங்கு செம்பும் கலந்து இருக்கும்.

தமிழர்கள் தங்கத்தின் தரத்தை 'மாற்று' என்ற அலகில் கணக்கிட்டார்கள். தூய்மையான தங்கம் 10 1/2 மாற்றுக் கொண் டது (இதைப் பத்தரை மாற்றுப் பசும் பொன் என்பார்கள். எனவே, ஒரு மாற்று என்பது 2 1/4 காரட்டுக்குச் சமம்.

மணிகள், தங்கம் நிறுக்கும் கல்லைத் தமிழர்கள் 'ஆணிக்கல்' என்றார்கள்.

ஆங்கிலேயர்க்ள் 'அவுன்சு' எடையில் நிறுப்பார்கள். ஒரு காரட்டு என்பது 0.007 அவுன்சு.

—நூல்—'நவமணிகள்' —அ. அய்யூப்

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா 20.00
அரையாண்டுக் கட்டணம்	:	,, 10.00
தனியிதழ்	:	,, 1.75

ஓரிதழுக்கு உருபா 3.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

நூற் சுருக்கம் :

இன்றுள்ள தமிழர்கள்!

பர். க. ப. அறவாணன்.

(இக் கட்டுரை மாந்தவியல் பேராசிரியர், பர். க. ப. அறவாணன் அவர்கள் அண்மையில் எழுதி வெளியிட்ட 'தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்' எனும் அரிய நூலின் சில முன்பகுதிக் குறிப்புகள் ஆகும். இந்நூலை அனைத்துத் தமிழ் அன்பர்களும் வாங்கிப் படிக்க வேண்டும். பர். க. ப. அறவாணன் நம் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ,தொடக்ககால முதல் இன்று வரையிலும் தென்மொழியின் பால் நீங்காப் பற்றுடைய—தென்மொழி அன்பர் ஆவர். 304 பக்கமுள்ள இந்நூல் உரு 25/- ஆகும். கிடைக்குமிடம் 'ஐந்திணைப் பதிப்பகம், 282, பைகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5.)

சரியான கணிப்பு :

தமிழரைப் பற்றித் தமிழிற்கு உள்ளாகவும் தமிழர்க்கு உள்ளாகவும் இருந்து பார்ப்பதை விட அவற்றிற்கு அப்பால் இருந்து காண்பதே சரியான கணிப்பைக் கொடுக்கும்.

இன்று மிகத் தாழ்ந்த இனம் !

தென்னிந்திய மொழியினங்களுள், இன்று மிகு சிறப்புடன் (செல்வாக்குடன்) விளங்கும் மலையாள இனம், வட இந்திய மொழியினங்களுள் இன்று மிகு சிறப்புடன் விளங்கும் பஞ்சாப் இனம், வங்க இனம் ஆகியவற்றுடன் தமிழ் இனத்தை ஒப்பிட்டு நோக்கினால், தமிழினம் தாழ்ந்த இனமாக இன்று உள்ளது என்பது புலப்படும். உலகில் சாய்காலுடன் விளங்கும் ஆங்கிலேயம், செருமானியம், யூதம், சீனம், சப்பானியம் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழினம் மிக மிகத்தாழ்ந்த இனமாக இன்று உள்ளமை வெட்ட வெளிச்சமாகும் !

குமுகாயத் தாழ்ச்சி !

இப் பார்வையைக் குமுகம், பொருளியல், அரசியல் என முத்திறப்பார்வையிலும் நோக்கின் மேற்கண்ட செய்தி உறுதி பெறும். குமுகப்பார்வையில், தமிழினம் எந்த அளவு, தாழ்ந்துள்ளது என்பதனைத் தமிழரிடையே மிக மிக மலிவாகப் பேசும் பாலுறவுக் கொச்சைச் சொற்கள் தெளிவுறுத்துகின்றன. அதுவும் சென்னைப் பேச்சுத் தமிழில் வழங்கும் கொச்சைச் சொற்கள், இன்று கல்லூரியில் கற்கும் மாணுக்க இளைஞர்களிடம்கூடச் சொல்லுக்குச் சொல் நடமாடுவதைக் கேட்கும் அவலத்தை எண்ணிப் பாருங்கள் ! தமிழினத்தின் பண்பாடு எங்கே இருக்கிறது என்பது துல்லியமாகத் தெரியும் !

தமிழகப் பொருளியல் சீரழிவுகள் :

இந்தியாவில் உள்ள இருபத்தைந்து மாநிலங்களில் அச்சாகும்

மொத்த பரிசுச் சீட்டுகளில் கிட்டத்தட்ட எழுபது விழுக்காடு தமிழ்நாட்டில் மட்டும் விற்பனை ஆகின்றன.

தமிழருடைய பொருளியல் நிலை மிகவும் இரங்கத் தக்கது. தென்னிந்தியாவிலேயே வறுமை பெருகிக் கிடப்பது தமிழ் நாட்டில் தான் என்று கணக்கிடப் பெற்றுள்ளது. 39.6 % தமிழர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்றனர். சிற்றூர்களில் 1 கோடி47 இலக்கத்து 60 ஆயிரம் பேரும், நகரங்களில் 52 இலக்கத்து 6 ஆயிரம் பேரும், அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் இல்லாது தவித்துக் கொண்டுள்ளனர்.

வேலையில்லாதோர் எண்ணிக்கை கேரளாவுக்கு அடுத்தபடியாகத் தமிழ் நாட்டிலும், புதுச்சேரியிலும்தாம் இந்தியாவிலேயே கூடுதலாக உள்ளது. வேலையில்லாமையில் இந்தியச் சராசரி 8.5 % ; தமிழ்நாடு 16 % ; கேரளம் 26 % ; புதுச்சேரி 22.5%.

தமிழர்க்கு உலக இழிவு :

வெளிநாடு சென்ற தமிழரைச் சிங்களவர் 'கள்ளத்தோணி' என்கின்றனர். மேற்கிந்தியத் தீவுகளில் தமிழரைக் 'கூலி' என்கின்றனர். பர்மாவில் அவர்களை 'கல்லா' (கடல் தாண்டி வந்தவர்) என்கின்றனர். ஆந்திரத் தெலுங்கர் இவர்களை 'அரவர்' (ஒலியெழுப்புபவர்) என்கின்றனர்.

இழிவுக்கோர் எடுத்துக் காட்டு :

இந்திரா கொலை செய்யப்பட்டவுடன், இந்தியாவிலேயே தமிழினந்தான் அத் துன்பத்தை மிகுதியாக உணர்ந்தது. அவர் மறைவைத் தாளாமல் 4 தமிழர் தீக்குளித்தனர் ; 3 பேர் தூக்குப் போட்டுக் கொண்டு செத்தனர். ஒருவர் நஞ்சருந்தி மாண்டார். 7 பேர் மாரடைத்து உயிர் துறந்தனர். ஓரிசாவில் ஒருவர் தீக் குளித்து மாண்டதாகச் செய்தி வந்தது. அவரும் தமிழரே ! மலேசியாவில் தேநீர்க் கடை வைத்திருந்த ஒருவர் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தார் ; அவரும் தமிழரே !

ஆனால், இந்திரா பிறந்த உத்திரப் பைதிரத்திலோ, அவர் குடும்பத்தின் பிறந்த இடமான காசுமீரிலோ, அவரைத் தேர்தலில் வெற்றி பெறச் செய்த ஆந்திரத்திலோ, அவர் கட்சி ஆட்சியிலுள்ள பிற மாநிலங்களிலோ மருந்துக்கு ஒருவராகிலும் செத்தார் என்னும் செய்தியில்லை. தமிழர் பற்றுடையவர் என்பதால் மட்டும் சாகவில்லை. (ெ)மலிவான உணர்வினர் என்பதே இத் தனைத் தமிழர் செத்ததற்குக் காரணம்.

தமிழரைத் தாழ்த்திய நான்கு தன்மைகள் :

தமிழினத்தை வரலாற்றுப் பார்வையுடன் பதினைந்து நூற்றாண்டுகள் திரும்பிப் பார்த்தால் அவர்தம் வீழ்ச்சிக்குப் பின் புலங்கள் புலப்படும்.

1. போர்க் குணமின்மை.
2. தாழ்வு மனப்பான்மை.

3. அயலாரை, அயல் நாகரிகத்தை, அயல் பண்பாட்டைக் கண்மூடி வரவேற்றுப் போற்றியமை ; போற்றுகின்றமை.
4. தொலை நோக்கு இன்மை.

மேற்கொண்ட நான்கு தன்மைகளும் தமிழரை அன்றிலிருந்து இன்று வரை பின் இழுத்துத் தள்ளிக் கொண்டே இருக்கின்றன. இந் நான்கின் மூலத்தை அறிந்து கிள்ளி எறிந்தாலன்றித் தமிழினம் சிறப்புக் குரிய ஓர் இனமாக மீண்டும் தழைத்தோங்க முடியாது. ஏனைய மொழியினங்களைப் போல் வளரவோ வாழவோ முடியாது.

தமிழரிடம் தன்மானம் இன்மை :

தமிழர் தம் தன்மைகள் இன்றும் மாறாமல்—கோழைத் தனம் கொண்டதாக இருக்கிறது. பிப்ரவரி 87, முதற் பக்கம் வெளிவந்துள்ள இல்லசுட்ரேட்டடு வீக்கிலி—யில் சதுர்வேதி என்னும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் 'தமிழ்நாடு இந்தியா இல்லை' (Tamil Nadu is not India) என்னுந் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அக் கட்டுரையில், தமிழரைப் பற்றி எவ்வளவு இழிவாக எழுத முடியுமோ அவ்வளவு இழிவாகத் தாழ்த்திச் சாடியுள்ளார். படித்த தமிழர்கள் அனைவரும், அக் கட்டுரையையும் படித்துவிட்டு அமைதியாகவே இருந்தனர்.

கருநாடக மாநிலத்திலிருந்து வெளிவரும் ஆங்கில நாளேடு ஒன்றில் (நவம். 87) இசுலாம் மதத்தைச் சற்றே பழிப்பதாக ஒரு கதை வெளி வந்திருந்தது. அந்தக் கதை வந்த அடுத்த நாள் கருநாடக மாநிலமே கொதித் தெழுந்தது ; பலர் கொலையுண்டனர்; நாளேடு மன்னிப்புக் கேட்டுக் கொண்டது. அதே போல் கேரள மாநிலத்தில் நடத்தப்பட்ட ஒரு கற்பனை நாடகம், ஒரு மதம் சார்ந்த மக்களைப் புண்படுத்துகிறது என்பதற்காகப் பெருங் கிளர்ச்சியே நடந்தது.

தமிழ்மொழி பேசும் ஓர் இன மக்களையே பழிப்பதாக, உலகம் எங்கும் செல்லும் ஓர் ஆங்கிலக் கிழமை ஏட்டில் கட்டுரை வெளி வந்தும், தமிழர் எத்துணை அமைதி காக்கின்றனர் ! இத்துணைக்கும் காரணம், தமிழர் தம் பெருந்தன்மையா ? கையாலாகாத் தனமா ?

சாதியுணர்வால் ஒன்று படுகிறான் ;
இனவுணர்வால் ஒன்று பட மறுக்கிறான் :

அதே சமயம், சில ஆண்டுகளுக்கு முன்பு, குமுதம் என்னும் தமிழ்க் கிழமை ஏட்டில், தொடர்கதை ஒன்று வெளிவந்தது. ஆனால் அக் கதை முடியவில்லை; காரணம், அக் கதையில், கதையாசிரியர், கதையுறுப்பினர் ஒருவரை ஒரு சாதியைச் சார்ந்தவராகப் படைத்திருந்தார்; இந்தியாவில் அப்படித் தானே எழுத முடியும் இங்கு ஒவ்வொருவனும் ஏதேனும் ஒரு சாதியைச் சார்ந்து தானே பிறக்கிறான்; கதையில் அந்தக் குறிப்பிட்ட சாதி

யையுடைய கதையுறுப்பினர் ஏதோ ஒரு வகையில் இழிவுடைய வராகச் சுட்டப்பட்ட பொழுது, அச்சாதியைச் சார்ந்தவர்கள் பொங்கி யெழுந்தனர்; அவ் விதழ்ப் படிகள் எரிக்கப் பட்டன. இதழ் விற்கும் கடைகள் மூடப்பட்டன. முடிவு? அத் தொடர் கதை இடையிலேயே நிறுத்தப் பட்டது

இதிலிருந்து தெரிவது என்ன? தமிழனை எவன் பழித்தாலும், தமிழர்கள் பொறுத்திருப்பார்கள். அதேபோல் தமிழை எவன் இழித்தாலும் தமிழர்கள் பொறுத்திருப்பார்கள். ஆனால் தமிழினத்தில் ஒரு கூறுயுள்ள ஒரு சாதியைப் பற்றி எவன் தாழ்வாகச் சிறிதே கூறினாலும், அச் சாதியைச் சார்ந்த தமிழர்கள் பொங்கு வார்கள்; கொதிப்பார்கள்; குதிப்பார்கள்.

தமிழர்களிடம் எளிதே உணர்ச்சி வயப்படும் தனிமானம் உள்ளது; கூட்டமாகக் குமுகத்திற்காகப் பொங்கி யெழும் இன மானம் இல்லை. தமிழர்கள் கூட்டூக்கம் (Team Sprit) இல்லாத வர்கள். தனியாகக் குதித்துக் கொதித்து அழிவார்கள். கூட்டாக ஒன்று பட்டு ஒன்றைச் செய்ய ஆற்றல் அற்றவர்கள்.

இதற்கு இன்றைய நிலையில் சான்றுகளாக அமைபவை:

1. ஈழத் தமிழரின் பலவேறு நெல்லிக்காய்க் குழு அமைப்புகள்.
2. 1937 முதல் போராடியும் இந்தியை முறியடிக்க முடியாமை.
3. 1949 முதல் ஈழச் சிக்கலை வங்காளிகள் போல் ஒரு முடிவிற்குக் கொண்டு வர முடியாமை.

தாழ்வு மனப்பான்மை:

தமிழர்கள் பொதுவாகத் தாழ்வு மனப்பான்மை உடையவர்கள். எனவே தான், தம் தாய்மொழியை விடப் பிற மொழிகளை உயர்வு எனப் போற்றுகின்றனர்; தம் பண்பாடுகளை விட அயலார் பண்பாடுகளை உயர்வாகக் கருதுகின்றனர்; தம் நாகரிகத்தை விட, இறக்குமதி நாகரிகத்தையே சிறப்பாக எண்ணுகின்றனர். 'நாயேன், புழுவினும் சிறியேன், அடியேன், தாசானுதாசன்' என்னும் தமிழ் வழக்குகள், நெடுங்கிடை வணக்க (சாஷ்டாங்க நமஸ்கார) முறைகள் ஆகியன சான்றுகள்.

தாழ்வு உணர்வில் உச்சம், தமிழன் தன்னையே தாழ்வாகக் கருதுவது ஆகும். தமிழர் பின்பற்றிய சமயங்களும், இந்தப் போக்கிற்குப் புகை போட்டு வளர்த்து விட்டன. குற்றத்தைக் குற்றமே என்று சொல்லக் கூட மிகு துணிவு வேண்டப் படுகிறது. இல்லையெனில் நக்கீரன் வரலாறு, வியப்பான வரலாறாக இங்கே போற்றப் பட்டிருக்குமா?

தலைமை வழிபாடு:

தாழ்வு மனத்தின் வெளிப்பாடுகளுள் ஒன்றாகத் தலைமை வழி

பாடு கொடி கட்டிப் பறக்கிறது. அரசியல், திரை, பொதுவாழ்வு முதலான அனைத்துத் துறைகளிலும் தலைமை வழிபாடு, தொண்டர்களை எண்ணத்திலும் செயலிலும் முடமாக்குகிறது.

சொந்தச் சிந்தனையின்மை :

தலைமை வழிபாடு உச்சத்தில் இருப்பதால், தனக்காக, தன் மொழிக்காக, தன் இனத்திற்காக, தன் நாட்டிற்காகத் தானே சிந்திக்க வேண்டியவற்றைச் சிந்திக்கத் தவறுகிறார்கள். எனவே தான் 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி ; தலைவன் எவ்வழி ; தொண்டர் அவ் வழி'—என்று எளிதாக வழி தப்ப முடிகிறது. ஆளுவோர், அதிகாரத் தலைமையில் இருப்போர் மிக எளிதாகச் சுரண்ட முடிகிறது. சுவைஞர் (இரசிகர்) மன்றங்கள் பெருகிய அளவிற்குச் சிந்தனை மன்றங்கள் பெருகாமைக்கு இதுவே காரணம்,

திரை நடிகர், நடிகை முதன்மை பெறும் அளவிற்குச் சிந்திக்கும் அறிவாளி முதன்மை பெற இயலாமைக்கும் இதுவே காரணம்.

திரைப் படத்திற்குத் திரளும் அளவு கூட்டம், சிந்தனையாளர்களுக்குத் திரளாமைக்கும் இதுவே காரணம்.

சுவைக்கு மூல முதல் உணர்ச்சி ; சிந்தனைக்கு மூல முதல் அறிவு.

எனவே, இங்கே ஒரு நடிகன்/நடிகை நாட்டை ஆளுவோராக வரமுடியும். ஓர் அறிஞன் ஊரை ஆளுவோனாகக் கூட வர முடியாது. கோவை அறிஞர் கோ. து. (நாயுடு)வை நினைத்துப் பாருங்கள், சட்டமன்ற உறுப்பினராக வென்று அமைச்சராக இருந்த நடிகரை எண்ணிப் பாருங்கள்.

மொழி, இன—நாட்டமில்லாத இனம் வீழும் :

தன் மொழி, இனம், பண்பாடு, நாகரிகம் ஆகிய பற்றுகள் இன்றைய மாந்தனுக்கு இருந்தே ஆக வேண்டும். இவற்றைத் தாழ்வாகக் கருதும் எந்த இனமும் முன்னேறியதே இல்லை. உயர்வாகக் கருதும் தாழ்ந்த இனமும் முன்னேறி விடும்.

கிரேக்க, உரோம வரலாற்றுப் பின்னணியைக் காட்டிக் காட்டியே, சொல்லிச் சொல்லியே, காக்கேசிய (ஐரோப்பிய வெள்ளை) இனம், ஏனைய நீக்ராய்த், மங்கோலிய, ஆத்திரேலிய, காப்வாய்த் (Copoid) இனங்களை அடிமை கொண்டது.

தம் இனப் பற்றுதலே, சப்பானியரை நூற்றுண்டுதோறும் வெல்ல வைத்தது. சப்பானியரைச் சுட்டிக் காட்டியே, மாசேதுங் கால், சீனமக்களை ஒருங்கு காட்டிப் புரட்சி நிகழ்த்த முடிந்தது.

அராபியரைக் காட்டியே யூதம் சிறுபான்மை இனம் பெரும் வலிவைத் திரட்டியது,

ஆங்கில இன முன்னணியைக் காட்டிச் செருமானிய இன

இந்தியத் தேசிய இனங்களின் விடுதலை எழுச்சிகள்!

-தென்மொழி கரிகாலன்.

'நயா துனியா' இதழின் ஆசிரியர் சாயித் சித்திக் என்பவர் காலித்தான் தலைவர் சக்சிக் சிங் சவுகான் என்பவர் இலண்டன் சென்று நேருரை கண்டார் என்பதற்காகவும், அவர் நேருரையை யும், அதன் தொடர்புடைய கட்டுரை ஒன்றினையும் 1986-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19-ஆம், 26-ஆம் பக்கல்களில் வெளியிட் டார் என்பதற்காகவும், அவர் இ. பி. கோ. 153-ஏ, 153-பி வன் முறைத் தடை சட்டத்தின் கீழ் தளை செய்யப்பட்டார். சாயித் சித்திக்கு இந்திய ஒருமைப்பாட்டுக்கு என்ன கேடு செய்து விட்

முன் பக்கத் தொடர்ச்சி)

மேன்மை வளர்க்கப் பட்டது.

உலகில் இன்று உயர்ந்திருக்கும் இனங்கள் அனைத்தும் ஒரு வகையில் தத்தம் மொழிவழி இனமேன்மையைக் கட்டிக் காத்தே வருகின்றன.

இரண்டாம் உலகப் பெரும் போருக்கு மூலவர்களான செர் மனியையும் இத்தாலியையும் விட்டு விட்டு, அமெரிக்கர் 1945-இல் தம் இனமல்லாத சப்பான் நாட்டில் அணுக்குண்டுகளைப் போட்டது, அமெரிக்கரின் மறைமுகமான இனப் பற்றுதலைக் காட்டுவதே!

தென்னாப்பிரிக்க வெள்ளையின மேலாண்மையை இங்கிலாந்து உள்ளிட்ட வெள்ளையர் நாடுகள் தொடர்ந்து ஏற்றுக் கொண்டு வருவதன் தலைமைக் காரணம் இனப் பற்றுதலே!

யூதர்களை எதிர்த்துப் பல்லாண்டுகளாக எதிர்க் கிளர்ச்சி நடத்தி வரும் பாலத்தீனியக் கொரில்லாக்களுக்கு அராபிய நாடுகள் அனைத்தும் ஆதரவு காட்டி வருவதற்கு அடிப்படை அரா பிய இனப்பற்றே!

அமெரிக்காவில் வாழும் நீக்ரோக்கள், ஆப்பிரிக்க நாடு களுக்குத் தொடந்து துணைநிற்பதற்குக் காரணம் கறுப்பு இனப் பற்றே!

வங்கதேசத்தவர் இசுலாம் மதத்தவராயினும், மேற்குவங்க மக்கள் தொடர்ந்து ஆதரவு காட்டுவதற்கு மூலக் காரணம் மொழி வழி இனப்பற்றே!

ஒருமைப்பாடு, உலக உடன்பிறப்புமை என்று வெளியே பல நாடுகள் முழக்கினாலும், உள்ளுக்குள்ளே தத்தம் இன மேன்மை யைப் பேதையுள் பெருவயிரமாகப் போற்றுகின்றன. அவ்வாறு போற்றுவது வெறியன்று; நெறியே! (தொடரும்.)

டார்? அல்லது பாசீச இராசீவுக்கு எதிராக என்ன குற்றம் செய்து விட்டார்? அவர் செய்த குற்றம் இதுதான். அஃதாவது சவுகான் தம் பேட்டியில் இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிராகவும், இராசீவுக்கு எதிராகவும் இந்து மதத்தினரை எதிர்த்தும், பிற சிறு பான்மை மதத்தினரைத் தூண்டியும் கருத்துகளை வெளியிட்டாராம். அதனை அப்படியே அவர் இந்தியத் துணைக்கண்ட மக்கள் முன் வெளிப்படுத்தி விட்டார். இந்தச் செயலே மிகப் பெரிய இரண்டகமாகக் கருதப் பெற்றுத் தளைப்படுத்திவிட்டது.

''எகானிமிக் அண்டு பொலிடிகல்'' ஆங்கிலக் கிழமை இதழின் பெண் செய்தியாளர் சர்சி மாலிக் என்பவர் (இவர் ஃபோரம் பதிவு இதழின் ஆசிரியர்). 1984 பொற்கோயில் படை நடவடிக்கைக்குப் பின் பஞ்சாபில் நெருக்கடிக் காலத்தைப் போன்ற விரைவுச் சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுப் பஞ்சாபிற்கும் பிற அண்டை மாநிலங்களுக்கும் போக்குவரத்துகள் துண்டிக்கப் பட்ட நேரத்தில், பஞ்சாப் சென்று நேரில் கண்ட காட்சிகளையும், அங்கு படைத்துறையால் மக்கள் படும் துயரங்கள் இன்னல்களையும் நேரில் கண்டும், பலரை நேருரை கண்டும், எகானிமிக் பொலிடிகல் வீக்லியில் 1984 செப்டம்பர் திங்கள் இதழில் எழுதி வெளியிட்டமைக்கு இவர் மீதும் இந்த இதழின் ஆசிரியர் மீதும் இந்திய அரசு இ. பி. கோ. 124-ஏ 505 (1) பி ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு தொடர்ந்தது.

சங்ரூர் என்னும் சிற்றூரில் வன்முறையாளர்களுடன் தொடர்புடைவன் என்ற ஐயத்தின் பேரில் அக்கும் சிங் என்கிற சீக்கிய இளைஞனைப் படைத்துறை உசாவலுக்கு அழைத்துச் சென்று சில நாள்களுக்குப் பின்னர் மோதலில், அக்கும் சிங் இறந்து விட்டான் என்று அவன் பெற்றோருக்குச் செய்தி அனுப்பியது படைத்துறை. ஆனால் அக்கும் சிங்கின் உடலில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பி செருகப்பட்ட காயம் இருப்பது சவ ஆய்வில் தெரிந்தது.

தீவிரக்காரர்களுக்கு உடந்தையாக இருந்தான் என்று உறுப்புக் குறையுள்ள சிறுவனை—நடக்க முடியாத அந்தச் சிறுவனை—விலங்கினம் போல் ஊர்ந்து செல்லுமாறு துன்புறுத்தியது படைத்துறை. பொற்கோயில் படைத்துறை நடவடிக்கையின் போது தளை செய்யப்பட்ட 4 அகவையிலிருந்து 14 வரை 40 சிறுவர்கள் லூதியானா சிறையில் அடைக்கப் பட்டார்கள். வேறு குற்றவாளிகளைப் பார்க்க செல்லும் போது மக்களிடம் இந்தச் சிறுவர்கள் கதறி அழுவது கல் நெஞ்சையே உருக்கிவிடுகிறது. இவர்கள் பெற்றோர்கள் யார் என்பதை அடிப்படை முழுமையாக மெய்ப்பிக்கும் வரை அந்தப் பிஞ்சு மழலைகளை விடுவிக்க முடியாது என்று படைத்துறை கூறுகிறது.

மேற்கூறிய செய்திகள் சில மட்டுமே ஆர்சி மாலிக் அம்மையாரால் தெரிந்து கொள்ள முடிந்தது. இது போன்ற துயர மிக்க நிகழ்ச்சிகள் அங்கு அன்றாடம் ஆயிரக் கணக்கில் நடைபெறு

வதை திரை போட்டு இன்று மூடலாம். நாளை உறுதியாக அந்தத் திரை கிழித்தெறியப் படப் போகிறது.

பஞ்சாப் மாநில முழுவதும் தங்கள் சமயத் தலைமைக் குரு வான குருநானக்கின் வழிபாட்டுப் பாடல்கள் அன்றாடம் ஒலிப் பது போல் பிந்தரன் வாலேயைப் பற்றிய பாமாலைகள் பாடப்படு கின்றன. காலித்தான் ஆதரவுப் பாடல்களும் பாடப்படுகின்றன.

சீக்கிய மக்களால் வடகோடியில் சீக்கிய இனமும் தென்கோடி யில் தமிழினமும், இந்திய வல்லாளுமையை எதிர்க்கின்றன, எதிர் காலத்தில் இந்து மத வெறியர்களால் தங்கள் சமயம் (இனம்)அழி யும் என்று சீக்கியன் அஞ்சுகிறான். இந்தி வல்லாளுமையால் இந்த வெறி பிடித்த வடநாட்டுப் பார்ப்பனிய முதலாளிகளால் தமி ழன் தங்கள் மொழி—நாகரிகப் பண்பாடுகள் அழிந்து விடுமோ, எதிர்காலத்தில் தமிழினம் அழிந்து விடுமோ என்று அஞ்சுகிறான். பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்கு பின்னர் தமிழன் தன்னுரிமையை இழந்து விட்டான். 600 ஆண்டுகளாகத் தமிழன், தமிழ்க் குமு காயம் விலங்கினத்துக்கும் கீழாகப் பற்பல ஆட்சிகளால் ஆளப் பட்டுப் பின்னர் வெள்ளையர் ஆட்சிக்குப் பின்னர் இன்று வட நாட்டு வல்லாண்மையால் இந்தி(ய)ப் பேராட்சியால் ஆளப்பட்டு வருகிறான். 600 ஆண்டுக் காலமாகத் தமிழன் அடிமை நிலையில் வாழ்ந்து வருவதால் மெல்ல, மெல்ல மொழித் தூய்மை கெடுக் கப்பட்டது. இப்பொழுது மொழியையே அழிக்க சூழ்ச்சி நடை பெறுகிறது. கலை, பண்பாடுகள் அனைத்திலும் சீர் குலைவுகள். இன்று தமிழினத்தின் உயிராகிய தமிழ்மொழியினை அழித்திட வட நாட்டு இந்தி வெறியர் முயன்று வருகிறார்கள். அவர்கள் முயற் சிகள் வெற்றி பெற, தமிழன் இடம் தரமாட்டான். 600 ஆண்டுக் காலத் தமிழனின் அடிமை வாழ்வால் தமிழனின் வீரம் செத்து விடவில்லை. அ'து உறங்கிக் கிடந்தது அறுநூற்றுக் காலம். 20-ஆவது நூற்றாண்டு முடியும் நிலையில், தமிழனின் வீரம் விழித் துக் கொண்டது. அதன் காட்சிதான் இன்று தமிழ்நாடு முழுவ தும் நடைபெறும் இந்தி ஆளுமை எதிர்ப்பு. அரசமைப்புச் சட்டத் தின் 17-ஆம் பிரிவு தீயை வைத்துக் கொளுத்தப்பட்டதும், அதற் குத் தமிழ்நாடு முழுவதும் பரவி 20 ஆயிரம் பேர்களுக்கு மேல் தமிழ் வீரமறவர்கள் சிறை புகுந்ததுமான அக் காட்சியே தக்க சான்று !

தமிழன் தன் நாட்டை மாற்றான் பிடியிலிருந்து விடுவிப்பது என்றால் அவ்வளவு எளிதான செயல் அன்று. பல மிகப் பெரிய ஈகங்கள் புரிய வேண்டும். பல ஆயிரம் பேர்கள் தமிழ்நில மீட் சிக்கு உயிர்ப் படையல் தந்து, அவர்களின் செங்குருதியில் தோய்த்த சிவப்பும், அவர்களின் ஒழுக்கத் தூய்மைக்கு இலச் சினையான வெண்மையும், செந்நிறத்தில் வட்டமான வெண்மை வடிவைக் கொண்ட கொடியாகப் பறக்கும் போதுதான், தமிழ னின் குமுகாயம் வட துருவ வல்லாளுமையிலிருந்து முழு விடுதலை

(இதன் தொடர்ச்சி 27-ஆம் பக்கம் பார்க்க)

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களின் பாவியம்.)

உறுப்பினர்: 1. வள்ளி, 2. கிழவர், 3. மருக்கொழுந்து 4. சிங்கன்.

வள் : நான் பட்டத் துன்பத்தை நீ, நீக்கினுயே ! நீ துன்பப்பட நான் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா ? மருக்கொழுந்து உனக்கு வரும் துன்பம், எதுவானுலும் என் அத்தானிடம் சொல்லி நீக்கி விடுவேன். உனக்கு நான் எத்தனை நன்மைகள் செய்தாலும் ஈடாகாது.

சிங் : என்ன ?, பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

கிழ : (வருகிறுர்)

வள் : தாத்தா உட்காருங்கள்.

கிழ : (உட்காருகிறுர்) மருக்கொழுந்து கவலையோடு இருப்பது போலத் தோன்றுகிறது ?

வள் : ஆம்.

சிங் : (அண்மையிலமர்ந்து) மருக்கொழுந்து உன்னை வாட்டியவன் தொலைந்தான், ஏன் இன்னும் கவலை ?

வள் : அத்தான் ! நம் அல்லலைப் போக்கிய மருக்கொழுந்தின் உள்ளக் கலக்கம் என்னவென்று கண்டு அதைப் போக்கிட வேண்டும். மருக்கொழுந்து உன்னை அழுத்தும் துயர் என்னவென்று அத்தானிடம் கூறு.

சிங் : அன்பை அணியாக அமைத்துக் கொண்டவர்களுக்குத் துன்பம் என்று ஒன்று வராது. பெண்கள் மீது நீ அன்பு வைத்ததாலேயே நீயும் வெற்றி கொண்டாய். அந்த அன்பை உணரத் தெரியாதவன் கருப்பனன். அதனுல்தான் துன்பத்தை நுகரப் போகிறுன்.

மரு.கொ : அண்ணு ; என் உள்ளக்கிடக்கையெல்லாம், நான் பெண்ணுய்ப் பிறந்ததால், துன்பம் என்னைப் பற்றிக் கொண்டது. வறுமையையும் போக்க முடியவில்லை. அந்த ஏக்கத்தின் தாக்கமே என் முகம் வாடித் தெரிகிறது. அண்ணு ! இன்னுங்கேளுங்கள். பிறப்பின் அடிப்படையில் கற்பிக்கப்பட்ட தாழ்ந்த சாதியில் பிறந்த ஓர் ஆண் அடிமையாக வாழ்கிறுன். அந்த ஆணுக்கும் பெண் அடிமை இந்த நாட்டில். எத்தனையோ பெரியோர்கள் சாதியையும், பெண்ணடிமையையும் போக்கமுயன்றும் முடியவில்லை. இரண்டும் அப்படியே உள்ளன. அதனுலேயே நான் இவ்வளவு பெருந்துன்பத்தில் அடிக்கடி அழுத்தப்படுகிறேன்.

சிங் : மருக்கொழுந்து ஆண்கள் பெண்களை அடிமையாக்குவதை

உணர்ந்த பெண்கள் இவர்களுடைய பிடியிலிருந்து விடுதலை பெற உணர்ச்சி பெறுகிறார்களா என்றால், இல்லை. ஓர் ஆண் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டியவுடனே ஆணுக்குப் பெண் அடிமையென்ற உணர்வைப்பெற்று விடுகிறாள். ஒரு பெண் அடக்கப்பட்ட போதெல்லாம் ஒடுங்கி வாழ்கிறாள். பின் ஒரு பிள்ளையைப் பெற்றவுடன் அடங்கி விடுகிறாள். ஆணின் வருவாயை எதிர் பார்க்கிறாள்.

மரு.கொழு : அண்ணா ! மனைவி என்று என்னை ஏற்றுக் கொண்ட பின்பும் பெண்கள் பலரோடு சுற்றும் கருப்பனனை, அது குற்றம் என்று யாவரும் சுட்டிக் காட்டவில்லை.

சிங் : (சட்டென்று) அப்படியா, மருக்கொழுந்து மணமான கருப்பனன் போன்றோர் பெண்கள் பலரோடு அலைய உரிமை இருக்கும் வரை பெண்களும் ஆண்கள் பலரோடு சுற்ற சட்டமே வேண்டும் என்கிறேன்.

மரு.கொழு : பிள்ளை இருந்தால்......

சிங் : ஆமாம். பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் பொறுப்பு சாருகிறபடியால் பெண் இன்னும் அடிமையாகிறாள் ; இந்த நாட்டில். அதனால் நான் என்ன சொல்லுகிறேன் என்றால் ஒரு புதையலைக் கண்டெடுத்தவன் அரசிடம் ஒப்படைக்கச் சட்டம் இருப்பது போல், பிள்ளை என்ற புதையலையும் அரசே ஏற்று வளர்க்க வேண்டும்.

மரு.கொழு : இப்படிப்பட்டத் திட்டங்களைப் பேசிக் கொண்டு இருக்கலாமே யன்றி நடைமுறைக்கு இந்த நாட்டில் கொண்டு வர எவனுக்கும் துணிச்சல் இல்லை. அந்தச் சட்டங்கள் வந்தபின் பார்க்கலாம். இப்போது என் கவலை என்ன தெரியுமா ? என்னதான் இருந்தாலும் கருப்பனனை நான் கணவராக ஏற்றுக் கொண்டபின், அவர் இறந்து விட்டால் நான் வாழ முடியாதே.

சிங் : இங்கேதான் புரட்சி வேண்டும். ஒரு பெண் இறந்ததும் ஆண் மறுமணம் செய்து கொள்ளுகிறானா இல்லையா ?

மரு.கொழு : மறுமணம் செய்து கொள்ளுகிறான்.

சிங் : நீ பிள்ளை என்று சொன்னாயே ; பிள்ளைகள் இருந்தால் கூட மறுமணஞ்செய்து கொள்ளுவதைப் பார்த்திருக்கிறாயா?

மரு.கொழு : இன்று நடைமுறையில் உள்ளதே !

சிங் : அந்த நடை முறையைப் பெண்ணும் கடைப் பிடித்தால் என்ன முழுகிப் போய் விடும். இருவருமே வாழப் பிறந்தவர்கள் தாமே !

மரு.கொழு : குமுகாயம் ஏற்றுக் கொள்ள வேண்டுமே ?! சட்டமும் இல்லையே !

சிங் : மக்கள் வாழ்வதற்கு ஏற்றார் போல சட்டம் இல்லையென்றால், சட்டத்தை மீறி விடவேண்டியதுதான். மக்களுக்

காகத்தான் சட்டம். சட்டத்திற்காக மக்கள் இல்லை. அப்படி ஓர் அமைப்பு இருந்தால் அது வேண்டாம்.

மரு.கொழு : அண்ணு, நாளைய தீர்ப்பு கருப்பனனுக்கு முடிவை வழங்கினுல், நானும்......

சிங் : (சட்டென்று) பொறு, பொறு நீ என்ன சொல்லப் போகிருய் என்பது எனக்குத் தெரியும். நாளை முடிவு எப்படி இருக்கும் என்பது யாருக்கும் தெரியாது.

மரு.கொழு : எப்படி இருந்தாலும், நான் இனி வாழ முடியாது; இந்த வழக்கில் அவர் தப்பினுலும், என்னை ஏற்று வாழ மாட்டாரே.

சிங் : உண்மைதான்.

வள் : மருக்கொழுந்து. கவலைப்படாதே. நான் நினைக்கிறேன். (சிங்கனை நோக்கி) அத்தான் நாளை தீர்ப்புக் கூறும் புலவர்களைக் கண்டு கருப்பனனை விடுதலை செய்யக் கூறினுல் என்ன?

சிங் : அவன் விடுதலை யானுல் ?... ..

வள் : எதற்கும் கட்டுப்படாத விலங்கையே மாந்தன் பிடித்துத் திருத்தி விடுகிருன். காட்டு விலங்காண்டிகளாக வாழ்ந்த மக்களேயே மக்களாகத் திருத்திய வரலாற்றைப் படித்திருக்கிறும். கருப்பனனையும் அவ்வகையில் நல்லவனுக வாழத் திருத்தலாம் அல்லவா ?

சிங் : நாய் வாலை நீட்ட முடியுமா ? நாமே அவனுக்காக அவனை விடுதலை செய்ய ஏற்பாடுகள் செய்தோம் என்றுலும் அவன் செய்த பிழைகளை மக்கள் ஒப்பார். மக்கள் ஒப்பினுலும் அறிவுடைய பெரியோர் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்; ஊரில் அவன் செய்த கொடுமைகள் மிகுதி ஊர் வாயை மூட உலை மூடி இல்லையே.

மரு.கொழு : நீங்கள் கருப்பனனை விடுதலை ஆகச் செய்யுங்கள்; நான் அவரைத் திருத்தி விடுகிறேன். அவரோடே வாழ்ந்து கொள்கிறேன்.

சிங் : மருக்கொழுந்து ! நாளை முடிவு என் கையில் இல்லை; அது நயன்மர் கையில் உள்ளது. அவன் செய்த கொலைகளும், கற்பழிப்புகளும், களவுகளும், கொள்ளைகளும் அளவில்லாதவை. அத்தனையும் நாளை உறுதிப்படுத்தப்படுமே; உனக்காக நான் கண்ணையன் கொலையை ஏற்றுக் கொண்டாலும், மற்றவற்றை எப்படி மறைப்பது ? யாவும் சிக்கல் பிக்கல்; சார்க்கரைப் பேச்சில் ஏமாறமாட்டார்களே.

மரு.கொழு : என் வாழ்வை நானே கெடுத்துக் கொண்டேன்.

சிங் : மருக்கொழுந்து, உன்னை மனைவியாக கருப்பனனை ஏற்றுக் கொள்ள வைத்தது அவனேடு நீ வாழ்வதற்கு. ஆனுல் அவன் உன்னேடு வாழ்ந்து உன் வாழ்வை வளமாக்கவில்லை. உன்னுயிருக்கும் அவனுல் பேரிடர் நிகழ்வதும் உறுதி என்று தெரிந்தபின், அவனை நீ பகையாளியாக்கும் சூழலுக்கு

ஆளாக்கப்பட்டாய். அப் பகைமையிலிருந்து தப்புவதற்கு அவனைப் பிடித்துக் கொடுத்து விட்டாய். அதனால் பல பெண்கள் காப்பாற்றப் பட்டு விட்டார்கள். நீ ஒரு பெரும் ஈகத்தைச் செய்திருக்கிறாய். இப்போது அவற்றையெல்லாம் தள்ளி விட்டு, தன்னிரக்கம் கொள்ளுகிறாய். என்றைக்குப் பகையாளியை வெல்ல களம் புகுந்த பின் இரக்கப்படுவது தன்னை அழித்துக் கொள்ள வாய்ப்பைத் தானே ஏற்படுத்திக் கொள்வதாகும்.

மரு.கொழு : என் கணவர் கொடுமையாளனே. அவரைக் காட்டிக் கொடுத்த ஈகையால் எனக்கு நன்மை இல்லையே.

சிங் : அவனைக் காட்டிக் கொடுத்து உன் வாழ்வை நீ அழித்துக் கொண்டதைத் தான் ஈகம் என்கிறேன். ஈகத்திற்குப் பயன் கிட்டாது. அப்படிச் செய்தவர்கள் பலர் புகழ் அடைந்துள்ளனரே அன்றி வாழ்க்கைப் பயனை அடையவில்லை. அதனால் உன் புகழ் நிலைக்கும். இவ்வூரார் உன்னை நினைத்த பின்னரே உண்பர்.

வள் : அத்தான் ! அறிவுரைப் புலவர்களுக்கு மருக்கொழுந்தின் நிலையை விளத்தமாக எடுத்துக் கூறி, பிழை செய்தவரை திருத்தலே அரிதான செயல் என்று கூறிப் பாருங்களேன். வாழ்வில் தவறியவர்களைச் சீராக்கி வாழ வைத்தலே அரிதிற் செயலாகும். இருவரும் செத்தொழிவதை விட செழிக்க வைத்து வாழ வைப்பதே நல்லதுதானே.

மரு.கொழு : அண்ணா, அதைச் செய்யுங்கள்.

வள் : கல்லையும், முள்ளையும் நீக்கி முல்லைச் செடியை முளைக்க வைக்கலாம் அல்லவா ?

சிங் : நீ சொல்வது வாய்மைதான். ஆனால் கருப்பனன் கல்லுக்குள் கிடக்கும் விதை. முளைக்காதே.

வள் : மருக்கொழுந்தின் கவலையை நீக்குவது தான் எப்படி ? புன் வாழ்வை புகழ் வாழ்வு மறைக்கும். பிறர் துன்பத்தை நீக்குவோருக்குத் தன் வாழ்வு வளம் பெறாது.

சிங் : நாளை முடிவைப் பார்த்துத்தான், எதற்கும் முயலல் முடியும். இப்போது அவரவர் வேலையைக் கவனியுங்கள்.

(தொடரும்.)

அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

-அமைச்சர்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களுக்கு இடையூறாய் இருக்கும் அன்பர்கள் பெயர்ப்பட்டியல்!

0 தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்—ஆகிய இதழ்கள் மூன்றும் எவருடைய தனிப்பட்ட நலனுக்காகவும் வெளியிடப் பெறவில்லை. அனைத்தும் தமிழ்மொழி, தமிழினம், தமிழ் நாட்டு முன்னேற்றத்திற்கும் நலன்களுக்கும், விடுதலைக்காக வுமே நடத்தப் பெறுகின்றன.

0 மூன்று இதழ்களாலும் ஒவ்வொரு மாதமும் பேரிழப்பே நேர் கிறது.

0 அருளுள்ள அன்பர்கள் அவ்வப் பொழுது அனுப்பி வைக்கும் நன்கொடைகளாலும், பொறுப்பாசிரியர் அவர்களின் சொற் பொழிவு வரவாலும், அவர்களுடைய நூல்களின் விற்பனைத் தொகையாலுமே, இவ் விழப்புகளையும் பொருட்படுத்தாமல் இதழ்கள் தமிழின நலம் கருதித் தொடர்ந்து வெளியிடப் பெறுகின்றன என்பதைக் கூடிய மட்டில் அன்பர்கள் அனை வரும் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

0 அறியாதவர்களைத் தமிழின நலத்திலும் தென்மொழியின் வளர்ச்சியிலும் அக்கறை காட்டாதவர்களாகவே கருது கிறோம்.

0 இவற்றுக் கிடையில்—ஏதோ ஓர் ஆர்வத்தாலும் அல்லது நன் னோக்கத்தாலும் என்று வைத்துக் கொண்டாலும் தவறில்லை— இம் மூவிதழ்களையுமோ, ஒன்றிரண்டையுமோ, சிறிது காலம் தருவித்து அல்லது கேட்டு வாங்கி விற்பனை செய்த அன்பர்கள் பலர், அடிக்கடி அன்பாலும், வேண்டுதலாலும், அச்சுறுத்தி யும், அவர்களிடம் உள்ள பட்டியல் நிலுவைத் தொகைகளை இன்று வரையும் அனுப்பாமல் ஆண்டுக் கணக்காக ஏமாற்றி வருகின்றனர்.

0 அத் தகைவில்லாதவர்களின் பெயர்களையும் அவர்கள்பால் உள்ள நிலுவைத் தொகைகளையும் இங்கு வெளியிடுகின்றோம். இது வெளியான இதழ்களையும் அவர்களுக்கு இலவயமாக அனுப்பி வைத்திருக்கிறோம்.

0 இவர்களாலும், இவர்களைப் போன்றவர்களாலுமே இவ் விதழ்கள் காலங் கடந்தும், நின்றுநின்றும், பக்கங்கள் குறைந் தும், விலைகள் கூடியும் வரும் நிலைகளைப் பெறுகின்றன என் பதை மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டி உள்ளன.

0 இப்பட்டியல் வெளிவந்த பின்னராகிலும், அவ்வன்பர்கள் அவர்களின் நிலுவைத் தொகையினை உடனே அனுப்பி வைப்பார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர் பார்க்கிறோம். அவ்வாறில்லையானால் அவர்களின் பெயர்கள் இத்தலைப்பின் கீழ் தொடர்ந்து வெளிவரும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

0 இதற்காக ஒவ்வோரிதழிலும் ஒதுக்கப்படும் பக்கங்களின் செலவுகளுக்கும் அவர்களே பொறுப்பாவார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

0 இந்த விரும்பத்தகாத நிலையைக்கண்டு, தென்மொழி வளர்ச்சியில் அன்பும் அக்கறையும் கொண்ட மெய்த்தமிழ் அன்பர்கள் அவர்களை முடிந்தால் கண்டு, அவர்களுக்கு நல்ல உணர்வு தோன்றும் படி எடுத்துக் கூறி, அந்நிலுவைகளை அவர்கள் அனுப்பி வைக்க உதவுவார்களானால், அவர்களுக்குப் பல்லாற்றானும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் தேவை என்று எழுதினால், நிலுவையாளர்களின் முழு முகவரிகளையும் அவர்களுக்குத் தெரிவிப்போம்.

0 கசப்பான இந்த நடைமுறை தொடராவண்ணம் அனைத்து அன்பர்களும் ஒத்துழைப்பார்கள் என்று வேண்டிக் கொள்கிறோம்.

1-9-'87.

அமைச்சர்.

பழைய நிலுவைப் பட்டியல்.

எண்.	பெயர்	ஊர்	தொகை/உருபா
1.	தடிக்காரன்,	பாளையங்கோட்டை	2.50
2.	இரா. வெற்றியழகன்,	கல்வியூர்	96.00
3.	ச.ந.ச. மார்த்தாண்டன்,	வேலூர்	75.00
4.	தேவநேயச்சித்திரன்,	கள்ளக்குறிச்சி	134.50
5.	தாரை. தமிழ்வென்றி,	தாராபுரம்	47.75
6.	S. கலையரசன்	கர்நாடக மாநிலம்	30.00
7.	சி. தமிழ்க்குமரன்,	புதுக்கோட்டை	45.00
8.	அழ. ஆறுமுகம்,	புதுக்கோட்டை	45.00
9.	மு. பழ. சதாசிவம்,	சேலம்	165.00
10.	கருவூர்—பாரி—மணி	கரூர்	322.50
11.	பூவரசு, ஆசிரியர்,	நெல்லை மாவட்டம்	25.00

12.	புலவர். சித்திரப்பூந்துறைவன்,	சென்னை-2	60.00
13.	புலவர். ந. அ. அண்ணாமலை,	ஆலங்காயம்	22.50
14.	இரா. தீனதயாளன்,	நயினார் பாளையம்	24.00
15.	புலவர். ந. தமிழவேள். க. மு,	திருக்கோயில்	80.00
16.	புலவர். இரா. த. சக்திவேலன்,	பண்ணுருட்டி	30.00
17.	அ. நெடுமாறன்,	வளவனூர்	40.00
18.	சு. நற்குமரன்,	மயிலாடுதுறை	30.00
19.	ச. மயிலப்பன்,	திண்டிவனம்	50.00
20.	செ. முத்து அடிகள்,	துறையூர்	20.00
21.	மு. செந்தமிழாதன்,	திருப்பராய்த்துறை	64.00
22.	நா. ப. செந்தமிழ்க்கோ,	வேலூர்(வ.ஆ)	83.88
23.	செ. கூத்தையன்,	புதுக்கோட்டை	32.50
24.	பாவலர் பெ. மணிவேலன்,	தருமபுரி	30.00
25.	அரங்க. தமிழ்மணி,	கோவை	181.80
26.	புலவர் எ. வே. திருவரசன், க.மு,	தகடூர்	30.00
27.	சா. க. தமிழ்மாறன்,	சேலம்	30.00
28.	அஞ்சை. சையத்மகபூ,	தேன்கனிக்கோட்டை	22.50
29.	புலவர். ஏ. சண்முகம்,	சென்னை-15	30.00
30.	கோ. அண்ணாத்துரை,	கிருட்டிணகிரி	12.50
31.	பாவலர். அன்புதீபன்	தேன்கனிக்கோட்டை	30.00
32.	வி. சடகோபன்,	வ. ஆ. மாவட்டம்	57.21
33.	சே. வீ. நம்பி,	தகடூர்	25.00
34.	தி. க. மும்முடிமுகிலன்,	கீழக்கரை	60.00
35.	கா. மாணிக்கம்,	சிவகங்கை	30.00
36.	மறை. மணாளன்,	கீழைக்கரை	25.00
37.	புலவர். இரா. வில்லாளன்,	இராமநாதபுரம்	30.00
38.	பாலுதென்னவன்,	பழனி	20.00
39.	செ. செல்லையப்பன்,	நெல்லை	30.00
40.	ந. பொருநையன்,	நெல்லைக்கூடலி	40.00
41.	மா. மு. தமிழ்மணி,	நல்லூர்	25.00
42.	புலவர் த. குமரநேயன்,	குமரி	22.50
43.	சே. தாமசு அந்தோணி,	நாகர்கோயில்	30.00
44.	மு. சிதம்பர நாதன்,	உதகமண்டலம்	20.00
45.	சி. கதிர்வேலு,	திருக்கோயிலூர்	40.00
46.	க. அப்பாத்துரை	வையம்பட்டி	10.00
47.	கோவி. இளஞ்சேரன்	தாம்பரம்	144.65
48.	அன்புச்சந்திரன்,	உடுமலைப்பேட்டை	50.40
49.	டி. விசுவாசம்,	திண்டுக்கல்	44.60
50.	எசு. இரவிச்சந்திரன்	வேலூர் (வ.ஆ.)	55.80
51.	சி. குமார்	புதுக்கோட்டை	415.05
52.	சா. தமிழன்பன்,	திண்டுக்கல்	203.51
53.	நா. மு. தமிழ்மணி	புதுவை	45.90
54.	இறைவாணன்,	சிங்கப்பூர்	997.86
55.	து. சு. மணியம்,	மலேசியா	412.60

செய்திகள்

1. தமிழ்க்கொடி — இளங்கோவன் வாழ்க !

கடந்த ஆடவைத் திங்கள் 26 (10-7-87) ஆம் பக்கல், வெள்ளிக் கிழமை, காலை 7-30 மணியளவில், பெரியார் மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் பாவேந்தர். அ. இராமலிங்கம்—இரா. பாக்கியம் இணையரின் அன்பு மகள் செல்வி. இரா. தமிழ்க்கொடிக்கும், செல்வன். த. இளங்கோவனுக்கும், ஈரோடு, செங்குந்தர் திருமண மண்டபத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சீரிய தலைமையில் திருமணம் நடை பெற்றது. தொடக்கத்தில் திரு. வை. நடேசன் அவர்கள் வரவேற்புரை யாற்றினார். அவரைத் தொடர்ந்து திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்றன, பின்னர் மண மக்களை வாழ்த்தி, திருவாளர்கள், ஈரோடை நகராட்சித் தலைவர் அரங்கராசன், பல்லடம். தென்மொழி முத்துக்குமரனார், புலவர் இரா. வடிவேலனார், புலவர். பொதிகைச் செல்வனார், வேலா. அரசமாணிக்கனார், உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர் தென்னவன்கோ ஆகியோர் நல்லுரை வழங்கினார்கள். இறுதியில் பாவேந்தர் இராமலிங்கனார் நன்றியுரை யாற்றினார்.

மணமக்களை வாழ்த்தி ஏராளமான வாழ்த்துரைகள் வந்திருந்தன. அவற்றுள் பாட்டுத்தென்றல், புலவர் பொதிகைச் செல்வனார், பாச்சுடர், புலவர் இரா. வடிவேலனார் இருவரும் இசைத்துக் கொடுத்த வாழ்த்துப் பா :

(கட்டளைக் கலித்துறை)

தாய்மொழிப் பற்றுத் தழைக்கின்ற நெஞ்சத்தோன் ! தண்டமிழாம்
தூய்மொழி யோடே இனமோங்க நாடோங்கத் தொண்டு செய்வோன் !
வாய்மொழி எண்ணம் செயலிவை தம்மிலே வாய்மைகொண்டே
பாய்மொழிப் போரிலே முன்னணி நின்றிடும் பண்புடையோன் !

உலகத் தமிழினமுன் னேற்றக் கழகத் தொருதலைவர்
இலகும் தமிழுரு வாம்எங்கள் பாவல ரேறவர்கள்
அலகில் படைக்கே அரிய தலைவனுய் ஆவதற்கே
நிலவும் தகுதி நிறைந்தவன் எம்இராம லிங்கமென்பேன் !

தமிழன்னை பெற்ற தனிப்பெரும் பாவலர், தண்டமிழ்ச்சீர்
இமையாது காத்திட்ட ஈடிலாக் காவலர், எங்களுளம்
கமழ்கின்ற பாவேந்தர் மீதிவன் கொள்பெருங் காதலினுல்
அமைவுறப் 'பாவேந்தர்' என்றிவன் தன்னை அழைத்திடுவோம் !

'பாவேந்தர்', 'பாண்டியன்', 'பாரி' இவன்தமிழ்ப் பற்றினையே
மூவேந்தர் வெற்றி முரசுபோல் எங்கும் முழக்கிடுமே !
நாவேந்தன் எங்கள் இராமலிங் கம்பெற்ற நன்மகள் தான்
பூவேந்தும் கொம்பாய் மணமேடை தன்னில் புகுந்தனளே !

அந்தநாள் பாண்டியன் போலவே செல்வன் அழகிளங்கோ
வந்தனன் இன்ப மணமேடை தன்னிலே ! வாழ்த்துமழை
செந்தமிழ்ப் பூவாய்ச் சொரிந்திடும் ! சிந்தை சிலிர்த்திடுமே !
இந்தநாள் போலவே இன்புற்று வாழ்க இவரிணைந்தே !

படிக்கெலாம் இல்லற மாட்சி யுரைத்த பழந்தமிழர்
குடிக்கெலாம் மூத்த தமிழ்க்குடித் தோன்றிக் குறள்மலரே
வடிக்கின்ற இல்லறத் தேன்மாந்த வந்த மணவண்டுகாள் !
வெடிக்கின்ற பூமணம் போல நறுமணம் வீசுகவே !

என்றன் மனத்திலே என்றும் இலங்கும் இராமலிங்கம்
குன்றம் நிகர்த்திட்ட கொள்கை யுரம்மிகக் கொண்டவனும் !
நன்று புரிதவம் தந்தநற் செல்வி தமிழ்க்கொடியின்
மன்றல் விழாவிலே நம்தமிழ்த் தாய்உயர் மாண்புறுவாள் !

செல்வி தமிழ்க்கொடி நற்கையைப் பற்றும் திருவமைந்தோன்
எல்லையில் நற்குணம் கொள்இளங் கோவெனும் ஏர்வளர்நற்
செல்வன் இவர்களின் இன்ப மணவிழாச் சீர்த்தலைமை
வல்லவர் பாவல ரேறுபெற் றார் !விழா மாட்சியென்னே !

தமிழ்க்கொடி நல்இளங் கோவன் எழிலார் தமிழ்மணமே
கமழ்ந்திட இல்லறம் நல்லற மாகவே காதலின்பம்
இமிழ்கடல் போலத் திகழ்ந்தோங்கப் பாவல ரேறவர்கள்
அமைவுற இல்லற மாட்சி யுரைப்பார் அழகுறவே !

வானும் நிலவும், நம் வண்மைத் தமிழும் வளர்அறமும்,
தேனும் சுவையும், திருக்குற ளும்வளர் சீர்த்தியும்போல்
ஊனுளம் ஒன்றியே வாழிய நீவிரென் றேயுவந்தே
நானும் தமிழ்ப்பா மலர்தூவி வாழ்த்தினை நல்குவனே !

அன்புத் தமிழ்க்கொடி நல்இளங் கோவனும் ஆற்றுகின்ற
இன்ப மனையறத் தெல்லா வளங்களும் எய்திடுக !
மன்பதைக் குங்கள் மனையற வாழ்வோர் இலக்கியமாய்
நன்று விளங்குக ! வாழ்கநீ டூழியிந் நானிலத்தே !

மணமக்களை வாழ்த்தி தென்னார்க்காடு மாவட்ட உ.த.மு.க. தலைவர், புலவர் திரு. தூக்கியதிருவடியார் அவர்கள் விடுத்து வைத்த வாழ்த்துப்பா :

(நேரிசை வெண்பா)

சீரார் இராமலிங்கம் செல்வி தமிழ்க் கொடியை
ஏரார் இளங்கோவன் ஏற்றிடவே—பாரோர்
புகழ்பா வலரேறு பொற்பார் திருமுன்
திகழ்மணஞ் செய்வர் சிறப்பு;

திருமண மக்காள் ! சிறப்பார் குறள்பால்
ஒருமனங் கொண் டொன்றி வாழ்க !—திருவினமாம்
நந்தமிழ் மக்களினம் நாடு பெற்று வாழவழி
முந்தெழுந்து தொண்டாற் றுக !

தமிழினத்தின் மக்கடொகை தரங்குறையா மைக்கும்
அமிழ்தன்ன தொண்டாற் றிடவும்—இமிழ் திரைநீர்
இவ்வுலகந் தன்னிலே ஏற்றமக்கள் பெற்றென்றும்
செவ்வையாய் வாழ்க, சிறந்து !

இத் திருமண நிகழ்ச்சிக்குக் கோவை மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் பல்லடம் மா. ஆறுமுகனார், உ.த.மு.க. கொள்கை பரப்புச் செயலர் தென்மொழி. ப. துரையரசனார், மயிலாடுதுறை தமிழின விடுதலைக் கழக அமைப்பாளர் வழக்கறிஞர். இராமதாசு, செயலர் திரு. அரசமாணிக்கனார் ஆகியோர் உள்ளிட்ட உ.த.மு.க. தென்மொழி அன்பர்களும் பேராசிரியர்கள், தமிழாசிரியர்கள், புலவர்கள், விடுதலைமறவர்கள் பலரும், பாவலரேறு குடும்பமும் கோவை, மதுரை, தஞ்சை, திருச்சி, சேலம், சென்னை முதலிய மாவட்டங்களிலிருந்து, இரண்டு நாள்களுக்கு முன்பாகவே வந்திருந்து திருமணத்தைச் சிறப்புறச் செய்தது குறிப்பிடத் தக்கது.

2. பிச்சைமுத்து – அறிவுச்செல்வி வாழ்க :

கடந்த மடங்கல் திங்கள் (28-8-87) ஆம் பக்கல் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அரியலூர் ஆசிரியர். நா. இராசப்பா அவர்களின் அன்புமகள் செல்வி. இரா. அறிவுச்செல்விக்கும், செல்வன் சி. பிச்சைமுத்துவுக்கும், அரியலூர் சி. ஆர். திருமணமண்டபத்தில் உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சீரிய தலைமையில் திருமணம் நடைபெற்றது. தொடக்கத்தில் செந்துறை வட்டாரப்புள்ளி இயல் ஆய்வாளர் திரு. சாமி தங்கராசு, க.மு. அவர்கள் வரவேற்புரை யாற்றினர். அவரைத் தொடர்ந்து பெரியகுயப் பள்ளம் ஓய்வு பெற்ற ஆசிரியர் கோ. குழந்தைவேலன் முன்னிலையில் திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பின்னர் மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள், அரியலூர், ஓய்வு பெற்ற தமிழாசிரியர் புலவர். இராம. அரங்கராசன், குவாகம் சு. உ. பள்ளி தமிழாசிரியர் புலவர் ந. இராமானுசனார், திருச்சி, உ.த.மு.க. பொதுச் செயலாளர் தென்னவன் கோ ஆகியோர் நல்லுரை வழங்கினர்கள். இறுதியில் திரு. இராசாராம் அவர்கள் நன்றியுரையாற்றினர்.

3. வேலுமணி - வேலுச்சாமி, வாழ்க :

கடந்த மடங்கல் திங்கள். 30-8-87 ஆம் பக்கல் ஞாயிற்றுக் கிழமை காலை 7-00 மணி அளவில், சத்திய மங்கலம், எசு. செல்லப்பன்—துளசியம்மாள் இணையரின் அன்பு மகன் செல்வன் செ.

வேலுச்சாமிக்கும் செல்வி. இரா. வேலுமணிக்கும், தாண்டாம் பாளையம் பிஞ்ச மேட்டுத் தோட்டத்திலுள்ள மணமகள் இல்லத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார்(முதல்வர்: உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்) அவர்களின் சீரிய தலைமையில் திருமணம் நடைபெற்றது. தொடக்கத்தில், சென்னை தோழர் பொன்.பரமேசுவரன் வரவேற்புரை யாற்றினார் அவரைத் தொடர்ந்து திருமண நிகழ்ச்சிகள் இனிதாக நடைபெற்றன. பின்னர், மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள், பெங்களூர், தோழர் செலினும், மதுரை தோழர் சந்திரனும், சி,பி,ஐ,எம், தோழர் எசு.எம்.மாராப்பனும் உ,த,மு,க, துணைப் பொதுச் செயலர், தென்னவன்கோ, திருவாட்டி, மீனா பரமேசுவரனும், சத்தியமங்கலம் தோழர் எசு. என். ம. நாகராசன் ஆகியோரும் நல்லுரை வழங்கினார்கள். இறுதியில் தாண்டாம் பாளையம் என். இராமசாமி நன்றியுரை யாற்றினார். ○

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறும்! அந்நாளே தமிழர் வாழ்க்கையில் தமிழர்களின் பொன்னான நாள். அந்த நாள் என்று? உறுதியாக 21-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தொடங்கும். அந்நாளை நோக்கித் தமிழர்கள் நடை போட வேண்டும். அவர்கள் கை கட்டி அந்த நாள் வரும் என்று உட்கார்ந்து இருந்தால் உறுதியாக அந்தப் பொன்னான வாய்ப்பு அவர்களை நோக்கி வராது. தமிழர்தாம் அந்தப் பாதையில் செல்ல வேண்டும். பாதை கற்கள் முட்கள் நிறைந்தது? அஞ்சத்தக்க மேடுபள்ளங்கள் நிறைந்தது. அந்த நெடும் பாதை தன்னுறுதியைத் தகர்க்கச் செய்யும் எனினும், தமிழன் மலைத்து விடாமல் மன உறுதியினை இழந்து விடாமல் பயணம் தொடரவேண்டும்.

ஓ! தமிழ்க் கூட்டமே! இன்னுமா கோழையாக மாற்றானுக் கடிமைப் பணிபுரிகிறாய்? உன் சொந்த இல்லத்தையே எதிரிக்குக் கொடுத்து விட்டுத் திண்ணையில் கிடக்கிறாயே, உனக்கு மானமில்லையா? வெட்கமில்லையா? உன் சொந்த வீட்டை எதிரியிடமிருந்து மீட்க வேண்டும் என்று துப்பு இல்லையா? நீ தான் வடதிசைக்காரனுக்குக் கொத்தடிமை குற்றேவல் பணிபுரிகிறாய். உன் வழிமுறையினராகிலும் விடுதலை வாழ்வு வாழவேண்டும் என்று நீ எண்ண வேண்டாவா?

உன் முன்னோர்கள் ஆண்ட வாழ்க்கையை நினைவுகூர்ந்து பார்! அவர்கள் வீர வாழ்வை எண்ணிப்பார். அவர்களிடமிருந்தாவது வீரம் பெற்றிடு. புறப்படு போருக்கு. இறுதி வெற்றி உனதே! தமிழா! வடநாட்டான் மீது நீ தொடுக்கும் போரில் உறுதியான வெற்றி பெற வாழ்த்துகிறோம் உன்னை. வாழ்க அன்னைத் தமிழ்! வெல்க தமிழ்நாட்டு விடுதலை!! ○

சிறுவன் யாரோ?

-தமிழவேள்

''இன்றைக்குக் குலுக்கல் நாள் இறுதி யாக
இருப்பதெலாம் இவ்விரண்டு சீட்டே காணீர் !
ஒன்றுக்குப் பலஇலக்கம் பெறுவீர் நாளை !
வாங்கிடுவீர், விலைஇரண்டே உரூபா ஐயா !''
என்றுங்கள் முன்னாலே எங்கும் வந்தே
இரப்பதுபோல் வேண்டுகிற சிறுவன் யாரோ ?
நன்றாகப் படித்தறியும் பருவந் தன்னில்
நலிவுற்று நிற்கின்ற தமிழன் தானே !

காலையினில் பிற்பகலில் இரவில் என்றும்
காட்டுகின்ற திரைக்காட்சிக் கூடத் தெல்லாம்
கோலின்றித் தடுமாறும் குருடர் போலே
குளம்பியுடன் தேநீரும் வடைமு றுக்கும்
பாலையொத்த பருவத்தில் விற்றுக் கொண்டே
பாழாகிப் போகின்ற சிறுவன் யாரோ ?
வேலைக்குச் சென்றால்தான் வயிற்றுக்(கு) ஏதோ
உண்டென்னும் வறுமையுடைத் தமிழன் தானே !

சிற்றூரில் பேரூரில் சாலை ஓரச்
சிறுதேநீர்க் கடையினிலும் சிறப்புற்(று) ஓங்கும்
சிற்றுண்டிப் பேருணவு சாலை யெங்கும்
சிற்றாளாய் எச்சிலிலை எடுத்துக் கொண்டும்,
பற்றாகும் ஏனங்கள் கழுவிக் கொண்டும்
பசிக்காகப் பாடுபடும் சிறுவன் யாரோ ?
கற்றுயர வழியின்றிக் கால மெல்லாம்
கீழ்நிலையில் கிடக்கின்ற தமிழன் தானே !

தங்கும்நல் பெருவிடுதி, துணிகள் வெட்டித்
தைக்கின்ற தையலகம், பண்டம் விற்கும்
அங்காடி, இலைசுருட்டுத் தொழில்செய் இல்லம்,
அன்றாடம் அச்சடிக்கும் அச்சுக் கூடம்—
எங்கெங்கும் எடுபிடியாய் துன்புற்(று) ஏங்கி
ஏதிலியாய் இருக்கின்ற சிறுவன் யாரோ ?
மங்காத புகழ்நல்கும் கல்வி கற்க
முடியாமல் சீர்குலையும் தமிழன் தானே !

பச்சையிளம் பருவத்தில் தெருவோ ரத்தில்
பழந்தாளை, துண்(டு)இரும்பைப் பொறுக்கிக் கொண்டும்,
மிச்சிலுக்கே இரவலனாய்த் திரிந்து கொண்டும்
மெலிந்துள்ள வயிற்றிலெழும் பசியைப் போக்க
எச்சிலிலைச் சோற்றுக்கு நாய்போல் சண்டை
இட்டுக்கொண் டும்உள்ள சிறுவன் யாரோ ?
எச்சமெனும் இசைநல்கும் கல்வி கற்க
இயலாமல் உழல்கின்ற தமிழன் தானே !

ஓர் ஆண்டிமடத்தின் வரலாறு

- கீதா உதயகுமார்.

இருப்பிடம் :- இந்தியத் துணைக் கண்டத்தின் கிழக்குப் பகுதியின் தென்கோடியில் அமைந்துள்ளது. கல் தோன்றி மண் தோன்ருக் காலத்திலிருந்து ''தமிழ்'' என்னும் மொழி இங்குப் பேசப்பட்டு வருவதால் ''தமிழகம்'' என்ற பெயரில் இவ்வாண்டி மடம் அழைக்கப் பெறுகிறது.

முற்கால வரலாறு :- இலக்கியம் சான்று கூறும் முந்தைய தமிழகத்தைச் சேரர், சோழர், பாண்டியர் என்ற முத்தமிழ் வேந்தர் ஆண்டனர். ''தங்களுள் யார் பெரியவர்'' என்பதைக் காட்டுவதற்காக இவர்கள் ஓயாமல் சண்டையிட்டு மண்டையை யுடைத்துக் கொண்டிருந்தனர். ஆயினும், முச்சங்கம் என்னும் கழகங்களை அமைத்து இவர்கள் முத்தமிழை வளர்த்ததாகத் தமிழ் இலக்கியம் பேசுகிறது.

இடைக்கால வரலாறு :- பல்லவர் (இவர்கள் தமிழரா அல்லரா என்பது வழக்கிற்குரியதாக உள்ளது.) பிற்காலச் சோழர், பாண்டியர் இக் காலத்தில் இடம் பெறும் தமிழ் மன்னராவர். ஆரியர் வரவினுல் சேரநாட்டுத் தமிழ் மலையாளமாக திரிந்து விட்டது. சோழர்களின் ஆட்சி முடிந்த பிறகு, தமிழக ஆட்சியில் இருந்த பாண்டியருக்குள் ஏற்பட்ட உட்பூசல்களைத் தக்க வாய்ப்பாகக் கொண்டு முசுலீம்கள் தமிழகத்துள் நுழைந்து, ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்களை விரட்டி, மீண்டும் இந்து சமய ஆட்சியைத் தமிழகத்தில் நிறுவுவதாகச் சொல்லிக் கொண்டு, விசய நகரப் பேரரசின் பேராளர்களான தெலுங்கு நாயக்கர் தமிழகம் நுழைந்து முசுலீம்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்கள் காலத்தில் ஏராளமான தெலுங்கர், அக்காலத் தமிழகத்தின் வடவெல்லையான வேங்கட மலையிலிருந்து தென்னெல்லையான குமரி முனை வரை குடியமர்த்தம் செய்யப் பெற்றனர். ஆட்சி தமிழர் கையிலிருந்து தெலுங்கர் கைக்கு மாறிய படியால், தமிழ் மொழியும், தமிழர் வலிவாண்மையும் சீரழிந்தன. பல தமிழ்க்கலைகள், குறிப்பாக சைவ நாயன்மார்களாலும், வைணவ ஆழ்வார்களாலும் வளர்க்கப்பட்ட தெய்வத் தமிழிசை பின்னுக்குத் தள்ளப்பட்டு அவ்விடத்தைத் தெலுங்குப் பாடல்கள் பிடித்துக் கொண்டன. தமிழகத்தை 72 பாளையப் பட்டுகளாகப் பிரித்து, அவற்றில் பெரும்பான்மையானவற்றை ஆளும் உரிமையைத் தெலுங்கருக்குக் கொடுத்த பெருமையும், சாதிவேறுபாடுகளை எருவும், நீரும் இட்டுத் தழைக்கச் செய்த பெருமையும், தமிழிசையை வீழ்த்திய பெருமையும் நாயக்க மன்னரைச் சேரும். இம்மன்னர்கள், பட்டு நெசவுத் தொழிலில் வல்லவர்களாக கருதப்படும் சௌராட்டிர மொழியினரையும் தமிழகத்தில் குடியமர்த்தம் செய்தனர். நாயக்கர் ஆண்டு வந்தபோதே தஞ்சைப் பகுதி மராத்தியர் ஆளுகையின் கீழ் வந்தது. இவ்வாட்சிக் காலத்தில் பல மராத்திய குடும்பங்கள் தமிழகத்தில் குடியமர்த்தம் செய்

யப் பெற்றன; மராத்திய ஆட்சியிலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. பின்பு ஐரோப்பியர் ஆட்சி, குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சி தமிழகத்தில் தொடங்கியது. வணிகம் செய்யும் நோக்கத்துடன் தமிழகம் வந்து, பின்பு அரசியலில் நுழைந்து, ஆட்சியையும் கைப்பற்றிய இவர்களது ஆட்சியில்தான் இதுகாறும் புறக்கணிக்கப் பட்டு வந்த தமிழ் மறுமலர்ச்சி யடைந்தது. ஆங்கில மற்றும் ஐரோப்பிய அலுவலரும், கிறித்தவ சமயக் குருமார்களும் தமிழைத் தெளிவுறக் கற்று அதன் பெருமையை உலகறியச் செய்தனர். தமிழ் கூறும் நல்லுலகம் இவர்களுக்கு என்றென்றும் கடன் பட்டுள்ளது.

தற்கால வரலாறு :- ஆங்கில ஆட்சியிலிருந்து இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்றது. மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப் பெற்றன. தமிழரின் வேங்கடமலை தெலுங்கு மாநிலத்தில் சேர்க்கப்பட்டது. மலையாளம், கன்னடம், இந்திமற்றும் பல இந்திய மொழிகளைப் பேசும் மக்கள் பல கரணியங்களை முன்னிட்டு ஆங்கிலேயர் ஆட்சியின் போது தமிழகத்தில் குடி புகுந்தனர். 1967 வரை பேராயக் கட்சியின் ஆட்சியில் இருந்த தமிழகம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கைகளில் வந்தது. வடமொழி மற்றும் இந்தி மொழிகளின் வல்லாண்மையிலிருந்து தமிழையும், தமிழரையும் (திராவிடர்) விடுவிக்கும் நோக்கத்துடன் இவ்வமைப்பு ஏற்பட்டது. இதில் பல தலைமுறைகளாக இங்கு வாழும் தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் போன்றோர் திராவிடர் என்ற பெயரில் தமிழருடன் உறுப்பினராயினர். பேராயக் கட்சியின் ஆட்சியில் இருந்த மும்மொழிக் கொள்கை (தமிழ், ஆங்கிலம், இந்தி) கைவிடப்பட்டுத் தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழிக் கொள்கை அரசுப் பணிகளுக்காகவும், கல்வி நிலையங்களுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டது.

திராவிடப்பொய்ம்மையும், தமிழின மெய்ம்மையும்:- ''திராவிடம், திராவிடர்'' என்ற சொற்கள் தமிழத்தில் மட்டுமே உரிமையுடன் உலவி வருகின்றன. தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற தென்மொழிகள் வடமொழிச் சார்பின்றி இன்றைய நிலையில் இலக்கிய மொழிகளாக வழங்க முடியாத அளவிற்கு உருக்குலைந்துள்ளன. தெலுங்கு மொழியில், அன்றாட வேலைகளில் ஒன்றான ''குளியல்'' என்பதைக் குறிக்கக் கூட ஓர் உண்மையான தெலுங்குச் சொல் இல்லை. ''ஸ்நானம்'' என்னும் வட சொல்லே படித்தவர் முதல் படிக்காதவர் வரை பயன்படுத்தப் படுகிறது. தெலுங்கரும், கன்னடியரும், மலையாளிகளும்—சமசுகிருதத் தலைமையை ஏற்க அணியமாக உள்ளார்களே தவிர தமிழின் தாய்மையை ஏற்க அணியமாக இல்லை. பல தலைமுறைகளாகத் தமிழகத்தில் வாழ்ந்தும், தமிழகத் திராவிடர் இன்றுவரை தமிழை வீட்டு மொழியாக ஏற்கவில்லை. தமிழ் மண்ணுக்கு மட்டும் தமிழருக்கு இணையாக உரிமை கொண்டாடுகின்றனர்.

யார் தமிழர் ? தமிழ்ப் பெற்றோர்களுக்கு பிறந்து இயற்கையாகவே தமிழை வீட்டு மொழியாகக் கொண்டவர்களோடு,

தமிழ்ப் பெற்றோர்களுக்குப் பிறக்கா விட்டாலும், தமிழை வீட்டு மொழியாக ஏற்றுக் கொண்டவர்களும் தமிழராக ஏற்றுக் கொள்ளப் பட வேண்டும். இதுவே தமிழரின் எண்ணிக்கையைப் பெருக்கும் வழி. எண்ணிக்கை மிகுதி என்ற ஒரே தகுதியைக் கொண்டு பிற இந்திய மொழிகளை அடக்கி ஆள நினைக்கும் இந்தி மொழியின் வல்லாண்மையை அடக்க இதுவே சரியான வழி.

தமிழக அரசின் தமிழுக்கு, தமிழருக்கு எதிரான செயல்கள் :-

1. காலஞ்சென்ற முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாத்துரை அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்ட இருமொழிக் கொள்கை சிறந்தது. ஆயினும் அடிப்படையில் ஒரு பெரிய குறைபாடு அமைந்தது. தமிழைக் கட்டாயப் பாடமாக பள்ளிகளில் வைக்காத இக்கொள்கை தமிழுக்கு எந்த வகை நன்மையும் செய்து விடப் போவதில்லை. 60 விழுக்காட்டினரே கருநாடகத்தில் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர். குடகு, துளு, கொங்கணி போன்ற மொழி பேசுவோர் தவிர, பிற மொழி பேசுபவர் அங்கு வெவ்வேறு காலகட்டங்களில் குடி புகுந்தவராகத் தெரிய வருகிறது. இருப்பினும் கன்னடம் கட்டாய இரண்டாவது பாட மொழியாக அங்கு ஆங்கிலப் பள்ளிகளிலும், கன்னடம் தவிர்ந்த பிறமொழி பயிற்றுப் பள்ளிகளிலும் அறிமுகப் படுத்தப் பட்டு விட்டது. "தமிழ், தமிழ்" என்று கூச்சலிடும் திராவிட அரசுகளோ இது வரை தமிழுக்கு இத்தொண்டைச் செய்ய முன் வரவில்லை. தமிழக ஆண்டி மடத்தின் பின்வாயில் வழியாக அன்று, முன் வாயில் வழியாகவே "இந்தி" மடத்திற்குள் நுழைந்து விட்டது. இனி அதை விரட்டுவது எப்போது? பள்ளிகளில் தமிழின் நடமாட்டத்தை ஒடுக்கிய பிறகு, தமிழுக்கென்று பல்கலைக் கழகம் எதற்கு? தமிழை அன்றாட அறிவியல் மொழியாக்கவா? அல்லது அகழ்வாராய்ச்சிக்குரிய மொழியாக்கவா? சென்னை முத்தியாலு பேட்டையிலுள்ள, மீர்சாகிபுப் பேட்டையிலும் வாழ்வோர் தமிழை மறந்து கொண்டிருக்கும் போது எந்தத்தலைமுறையிலோ இங்கிருந்து மொரிசியசு தீவு சென்று தங்கி விட்டோரின் இன்றைய தலைமுறையினருக்குத் தமிழ் தேவை தானா?

2. தமிழ் தவிர்ந்த பிற மொழிகளுக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் அம் மொழிப் பாட நூல்களைத் தமிழக அரசே அச்சிடுவது கொடுமையானது. வேறு எந்த மாநில அரசும் இவ்வாறு செய்வதாகத் தெரியவில்லை.

3. தமிழ் மீது காழ்ப்புக் கொண்டவன் என்று தமிழக வரலாறு கூறும் திருமலை நாயக்கத் தெலுங்கு மன்னனுக்கு (மக்களின் வரிப் பணத்தை வீணாக்கி) விழாவெடுக்க எண்ணம் கொண்டிருத்தல்.

4. அடுத்த தெலுங்கர் மாநாட்டைத் தமிழக அரசே நடத்தும் (மக்களின் வரிப்பணத்தில்) என்று 1984 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த தெலுங்கர் மாநாட்டில் தமிழக முதல்வர் செய்த அறிவிப்பு.

5. தெலுங்கைத் தமிழகத்தின் இரண்டாவது அரசு அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்று தமிழகத் தெலுங்கரிடமிருந்து வரும் வேண்டுதலுக்கு மறுப்புத் தெரிவிக்காமல் இருத்தல்.

6. மொழிவாரியாக மாநிலங்கள் பிரிந்து எத்தனையோ ஆண்டுகள் ஆன பிறகும், தமிழ் மீதும், தமிழர் மீதும் தெலுங்கு மொழியும், தெலுங்கரும் செய்த—செய்கின்ற வல்லாண்மையை நினைவுறுத்தும் வகையில் இன்று வரை உகாதிப் பண்டிகை(தெலுங்குப் புத்தாண்டு) அரசு விடுமுறை நாளாக அறிவிக்கப் படுதல்.

தமிழ் தழைக்க என்ன வழி ? : இன்றைய சூழ்நிலையில் ஆங்கிலம் உலக அறிவியல் மொழியாக உள்ளதாலும், இந்தியத் துணைக் கண்டத்தில்இந்தி பேசாதோரின் இணைப்புமொழியாகச் சில நூறு ஆண்டுகளாக இருப்பதாலும்,தமிழன் ஒவ்வொருவனும், தேர்ந்த ஆங்கில அறிவு கொண்டிப்பது நல்லதாகும். தமிழ்ப் பயிற்று மொழிப் பள்ளிகளில் ஆங்கிலத்தைச் சீரிய முறையில் பேசவும், எழுதவும், படிக்கவும் கற்பித்தால், ஆங்கிலக் கல்வியை நாடுவோரின் எண்ணிக்கை தமிழகத்தில் குறையும். தமிழ் உண்மையான அறிவியல் மொழியாக மிளிர முடியும். தமிழகம் இத்துறையில் பிற இந்திய மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ முடியும். தமிழ் நலனில் அக்கறையுடையோர் அனைவரும் ஒன்று சேர்ந்து உறங்கிக் கிடக்கும் தமிழக அரசைத் தட்டி எழுப்பி, இச்செயலைச் செய்து தமிழைத் தழைக்க முயற்சி செய்ய வேண்டும். ○

நாம் தமிழர்கள்.

நாமெல் லாரும் தமிழர்கள் ;
நாடாண் டவர்கள் ! அரசர்கள் !
நாமெல் லாரும் தமிழர்கள் :
நற்றமிழ் வளர்க்கும் புலவர்கள் !
நாமெல் லாரும் தமிழர்கள் ;
நல்லன செய்யும் தலைவர்கள் !
நாமெல் லாரும் தமிழர்கள் ;
நாடு காக்கும் மறவர்கள் !

நாமெல் லாரும் தமிழர்கள் ;
அண்ணன், தம்பி உறவினர்கள் !
நாமெல் லாரும் தமிழர்கள் ;
அக்காள், தங்கை உறவினர்கள் !
நாமெல் லாரும் தமிழர்கள் ;
நமக்குள் இல்லை பகைவர்கள் !
நாமெல் லாரும் தமிழர்கள் ;
நற்றமிழ் போற்றும் நல்லவர்கள் !

-பாவலர் இளஞ்சித்திரன்-

○ : 1241 : அன்பின் ஐயா, வணக்கம்; நலம்; நலமே மலர்க; உச்சநெறி மன்றத்தில் உயர் தமிழில் வழக்காடி, மெச்சி நயன்மை தனின் மேன்மையினை உரையாடி மீண்ட பெருந்தகையே மீளும் அறம்; மீண்டும் ஆண்ட தமிழ்ப்பெருமை அகன்றபடி அரங் கேறும் —மணிமுத்து, பழனி;

○ : 1242 : ஐயா, என் அன்பு வணக்கங்கள் உரித்தாகுக : அமிழ்தினுமினிய என் அன்னைத் தமிழுக்குத் தாங்கள் ஆற்றிய தொண்டு ஆயிரமாயிரம். தமிழ்ப் பயிர் வளர்க்கும் தன்னலமில் லாச் சுடரே ! நின் மலர்ப் பாதம் நித்தமும் வணங்கிடும் என் பெயர் நேரு; அகவை 23, கல்வி நிலை இளங்கலை வணிகவியல் இரண்டாம் ஆண்டு. ஊர் திருவண்ணாமலையடுத்த சிற்றூர் மண லூர்பேட்டை; படிப்பது திரு. கொளஞ்சியப்பர் அரசினர் கலைக்கல் லூரியில். ''தமிழ்ச்சிட்டு'' சிறுவர் கலையிதழில் என் பணிக்கு இடம் தர வேண்டுகிறேன். — அ. நேரு(வணி. இ.) முதுகுன்றம்.

○ : 1243 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா, வணக் கம். அன்பனின் வேண்டுகோளுக்கு இணங்கிக் கடந்த 7. 9. 87 அன்று நடைபெற்ற ஆசிரியர் நாள் விழா நிகழ்ச்சியில் பங்கேற்று, வீறுார்ந்த சொற்பெருக்காற்றி ஆசிரியர்களுக்கு எழுச்சியூட்டிய தங்களுக்கு அரவக்குறிச்சி சரக ஆசிரியர் கழகத்தின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினை அன்புடன் தெரிவித்துக் கொள்கின் றேன். அதுபோலவே எம் இல்லத்திற்கும் வந்து அருமையான கருத்துகளை அள்ளி வழங்கினீர்கள். அது கண்டு அனைவரும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தனர். அந்நிகழ்ச்சி எம் நெஞ் சில் என்றும் மறையாத நிகழ்ச்சியெனக் கூறிக் கொள்வதில் பெரு மிதம் அடைகின்றேன். அஃது உண்மையே ! தங்களின் பேரன்பிற்கு நன்றி !

அன்பன், புலவர். ப. எழில்வாணன், க.மு; கல். இ. பள்ளபட்டி.

○ : 1244 : திரு. ஐயா பெருஞ்சித்திரனாரே ! தமிழ் தமிழர் களுக்காக விடுதலை கேட்டிடும் தெள்ளு தமிழ்ப் பாட்டுக்காரரே ! உங்களுடைய தொண்டுக்கு இணை இங்கு ஒருவரும் இல்லை; தமி ழால் பிழைப்பவர்கள் நிறைய இங்கு உண்டு. அவர்களும் உங் களைப் பார்த்து மனம் கொதிக்கப் போகும் நாள் ஒன்று உண்டு; தமிழர்கள் அடிமையை விரட்ட அணியமாய் இல்லை; போராட் டம் நடத்திய பேர் பெற்ற தலைவர்கள்—தெளிவான அரசியலைத் தெரிந்து கொள்ளாமலும், ஒன்றும் புரியாது, திசை திருப்பியே தமிழ் மக்களை எப்பொழுதும் சுரண்டியே கொழுத்த தலைவர்கள் ! எத்தனை நாள்களுக்கு இக் கொடுமை இங்கு நடக்கும் ? தமிழ் இன மீட்புக் கொள்கையை எடுக்காதவரை எந்தத் தலைவரும் தமிழ் இனத் தலைவர் என்று சொல்லிக் கொள்வதில் உரிமை இல்லை. நம்மின மக்களுக்கு என்ன உரிமை இங்கு இருக்கிறது? மக் கள் எண்ணங்களை மழுங்க அடிக்கும் போராட்டங்களால் நம் மக் களுக்கு என்ன பயன் ? இங்கு எத்தனைக் கேடுகள் நாளும் நடக் கின்றன ? அத்தனைக் கேடுகளையும், தட்டிக் கேட்கும் துணிவு உண்டா அவர்களுக்கு ? தமிழ் தமிழ் என்று சொல்லியே ஒவ் வொரு நாளும் ஏய்க்கின்றார்கள். இவர்களை யார் இங்குத் திருத் துவது, என்று ஏங்கிடும் பெருஞ்சித்திரனார் பின் அணிதிரண்டிடு வீர் ! அத்தனை உரிமைகளையும் முழுமையாய்ப் பெற்றிடலாம். நயமாகப் பேசிடும் தலைவர்களை நம்பி என்ன பயன்தான் கிட்டி டுமோ என்று சிந்திப்போம். நலிந்த மக்களுக்கு நாளும் உழைத் திடும் அந்த நல்ல தலைவரை நம்பிடல் வேண்டும். எத்தனைத் தொல்லைகள் வந்தாலும் நாம் துவண்டிடக் கூடாது. தூய தமிழ்ப் பாட்டால் நம் பகைவரை அடையாளம் காட்டுவார் ! இந்தியை எதிர்த்துச் சிறை சென்றதாலே அரசுப் பணியும் போய் விட்டது. அதனாலே எத்தனை இடுக்கண்கள் அவருக்கு வந்துற்றாலும் தமிழ்

மக்கள் அடிமையை நினைத்தால் அவரின் தொல்லைகள் அனைத்தும் காற்றாய்ப்பறந்திடும். தூய்மை நிறைந்த தலைவராம். தமிழ் இனத்தின் காவலராம். அருந்தமிழ் பாடும் பாவலரேறுவாம். சிறந்த கருத்துகள் ஆக்கித் தரும் ஆவலராம். நல்ல பாவேந்தன் ! வற்றாது அருவிபோல் தமிழ் அங்கே பெருகும். அதைப் படிப்பவர் உள்ளம் மெழுகு போல உருகும். —வெ. புகழேந்தி, சென்னை-19.

O : *1245* : பாவலர் ஏறு ஐயா, அவர்களுக்கு வணக்கம் பல ! ஐயா தாங்கள் எழுதிய 'நடுவணரசின் கையாளாகச் செயல்படுகிறாரா சிதம்பரம்' ஆசிரியவுரை படித்தேன். உண்மையை நன்கு தோலுரித்துக் காட்டியிருந்தீர்கள். அதுமட்டு மன்று. தமிழ் மக்களுக்கு ஓர் எச்சரிக்கையும் கூட. இடைக் காலத்தில் இருந்த அரசர்கள், வடவரின் வேள்விக்கும், அவர்கள் கூறிய புனை கதைகளுக்கும், பொய்யுரைகளுக்கும் அடிமையாகி, இன்னும் சற்று வெளிப் படையாகச் சொன்னால் அவர்களது தோலுக்கும் அடிமைப் பட்டு அவர்கள் கைப்பாவையாகி, இனம், மொழி ஆகியன வற்றை இழிநிலைக்குக் கொண்டு வந்தனர். அ'து அறிவு வளர்ச்சி மங்கியிருந்த கால கட்டம். கோலாட்சி என்ற பெயரில் கொள்ளையர்கள் ஆண்ட காலம். ஆனால் இன்று மிகுந்த அறிவு வளர்ச்சி பெற்றுத் தன்னுரிமை பெற்ற மக்களாட்சி நடப்பதாகக் கூறிக் கொள்ளும் காலம். இருந்தாலும் தமிழகத்தின் நிலை என்ன? வடக்கில் இருப்பவர்களிடம் பதவிகளை இரந்து பெறுவதற்காகக், காட்டிக் கொடுப்பதற்கும், மானத்தை விலை பேசிக் கொத்தடிமை யாவதற்கும் கடுமையான போட்டி. இதில் யார் திறமை படைத்தவர்களோ அவர்களுக்குத் தான் பதவி என்ற பட்டுக் குஞ்சம். அஃதாவது, 'நாய் பேர் முத்து மாலை ; வெச்சுப் படைப்பது விளக்குமாறு' என்றாற் போல, அந்தக் கோடாரிக் காம்புகளைக் கொண்டு தானே, தமிழின நலனை, உரிமையை எழுச்சியை அடக்க வேண்டும். அல்லது கொச்சைப் படுத்தச் செய்ய வேண்டும். அதைத் தான் திருவாளர் சிதம்பரம் செய்கிறார்.

முன்பு சுப்பிரமணியம் தமிழகத்திலிருந்து போய், நடுவானத்தில் கொடி கட்டிப் பறந்தார். தமிழகத்திற்குக் கோடரிக் காம்பாகத் தாம் செயல் பட்டார். நல்ல வினைப்பாடு உடையவர் என்று புகழப் பட்டார். முதலாளிய மனப்பான்மையும், மண்டை வீங்கித் தனமும் இனத்தைத் தாழ்த்துகின்ற இழிந்த பண்பும் கொடிக் கட்டிப் பறந்தன. விளைவு, சொந்த மண்ணில், சொந்த இனத்தாராலேயே வீழ்த்தப் பட்டார். வீழ்ந்தவர் தேசிய நீரோட்ட த்தில் மூழ்கி மறைந்தே போனார். எழுந்திருக்க இயலவில்லை. பக்தவத்சலனார் நிலையும் பாரறியும். வினைப் பாட்டின் பெருமைகள் என்ன வாயின ? இருந்தாலும் அவர்களுக்கு ஒரு பெருமை உண்டு. ஊழலால் ஒழிந்து போகவில்லை. அறிவிருப்பவனுக்கு இன உணர்வில்லை. சிந்தனையற்ற மக்கள் பொறுக்கித் தின்னும் புல்லர்களைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார்கள். அவர்களின் இரவுத் தனமான வினைப்பாடுகளையும் இரண்டகச் செயல்களையும் கண்டும் காணாதவர்களாய்க், கேட்டும் கேளாக் காதினராய் ஏமாறி அழிகின்றனர். இவற்றிற்கெல்லாம் அடிப் படை என்னவென்றால் தந்நலப் பற்றுத்தான். இதுநாள் வரை தமிழினம் அழிந்ததும் தந்நலத்தின் கரணி மாய்த்தான். இப்போது அழிவதும் அதனால்தான். —புலவர், அறிவுடை நம்பி, மூலனூர்.